சந்தாதாரரின் கவனத்திற்கு :
காவலன்
வருட சந்தா ரூபா 9-00
6 மாத ,, ,, 4-50
3 மாத ,, ,, 2-25
(தபாற் செலவு உட்பட)

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

"ஒரு மனிதனுக்குப் பரலோகத்திலிருந்து கிடைக்கும் ஒப்பற்ற திருக் கொடை அவன் மனைவியே."
— ஜெரேமி டெய்லர்

94-ம் புத். | 1969-ம் ஆண்டு ஆடி மாதம் 26-ந் திகதி சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 28-ம் இல.

# புதியனவெல்லாம் நன்மையானவையல்ல

"புதியனவெல்லாம் தங்களில் தாமாகவே நன்மையானவை யல்ல; சில வேளைகளில் இவை அழிவுக்கும் ஏதுவாகக் கூடும்"
— பரி. தந்தை

இவ்வாறு பரி. தந்தை சென்றவாரம் மருத்துவ தாதிமாரின் கூட்டமொன்றில் எடுத்துக்கூறினார்.

மேலும் அவர் சொன்னதாவது: "கத்தோலிக்க சீவியத்தில் புதிது என்பது வெகு சிக்கலான ஒரு சொல். பாரம்பரியத்தை முறித்துத் திருச்சபையில் புதியனவற்றை உண்டாக்க முடியாது புரட்சிகர மனப்பான்மை சில கிறிஸ்தவர்களின் மனதில் புகுந்துவிட்டது. நம் முதிசமாகிய விசுவாசத்திலிருந்தாவது, கிறிஸ்தவ சீவியத்திலிருந்தாவது பிரிந்துகொள்ளக்கூடாது.

## கோடைகால வாசஸ்தலத்துக்கு செல்கின்றார் பாப்பரசர்

வழமைப் பிரகாரம் பாப்பரசர் கோடைகாலத்தை றோமாபுரிக்குச் சற்று வெளிப்புறமிருக்கும் தமது வாசஸ்தலமாகிய காசில்கொன்டொல்பாவில் செலவு செய்து வருவார். இதன் பிரகாரம் இவ்வாரத் தொடக்கத்தில் பாப்பரசர் 6-வது சின்னப்பர் தமது நெருங்கிய உத்தியோகஸ்தர்களுடன் அங்கு சென்றிருக்கிறார். அங்கிருந்தே இம்மாதம் 31-ந்திகதி ஆபிரிக்ககண்ட உகண்டா தேசத்துக்குப் பிரயாணமாவார். இப்பிரயாணமே பரிசுத்ததந்தை பாப்பரசரான தன்பின் ஆபிரிக்க கண்டத்துக்குச் செய்யும் முதற் பிரயாணமாகும். இதற்கு முதல் அவர் ஆசியா, வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பாப் பகுதிகளுக்குப் பாப்பரசராகத் திருயாத்திரை செய்திருப்பது நேயர்கள் அறிவரன்றோ!

## 48 வருட ஒப்பற்ற சேவை

### பத்திராதிபர் திரு. A. ஞானப்பிரகாசம் ஓய்வுபெறுகிறார்



1921-ம் ஆண்டு ஆனிமாதம் 1-ம் திகதி 'காவல'னின் ஆசிரியராகநியமனம் பெற்ற A. ஞானப்பிரகாசம் அவர்கள் சென்ற மாச ஈற்றில் ஓய்வு பெறலாயினர். **காவலன்** தனது 94 வருட சீவிய காலத்தில் தொடர்ந்து 48 வருடங்கள் அதாவது அரைவாசிக்கு மேற்பட்ட காலம் இப் பேர்பெற்ற ஆசிரியரின் கண்காணிப்பில் நாளொரு வண்ணம், பொழுதொரு மேனியாக வளர்ந்துவந்திருக்கிறது. சிறந்த கல்விமானும் எழுத்தாளருமான இப்பெரியார் இந்த நீண்ட காலத்தில் திருச்சபைக்கும் சமூகத்துக்கும் ஆற்றிய சேவை அளப்பரியது. இந்த ஒப்பற்ற பணிக்காக **காவலன்** இத் தருணத்தில் இப்பெரியாருக்குத் தன் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, அவர் இன்னும் நீண்ட காலம் தனது பொதுநல சேவையைத் தொடர்ந்து ஆற்ற வேண்டிய சுகபெலத்தைத் தேவன் அவருக்கு அருளவேண்டுமென்று பிரார்த்திக்கிறான்.

( 4-ம் பக்கம் பார்க்க )

## கஷ்ட காலமாயினும் போலாந்தில் கத், முன்னேற்றம்

போலாந்துதேசம் கத்தோலிக்க திருச்சபையின் சிரேஷ்டபுத்திரிஎன பல நூற்றாண்டுகளாக மதிக்கப்பட்டுவந்துள்ளது. ஆனால், 2-ம் உலக யுத்தம் முடிந்ததன்பின் அது துர் அதிர்ஷ்டவசமாக கொமியூனிஸ்த அரசாங்கத்தினால் ஆளப்பட்டு ருஷியாவின் ஆதிக்கத்தில் இருந்து வருகின்றது. சுயாதீனமாக மக்கள் தமது சமயத்தை அனுசரிக்க பல அரசாங்க தடைகள் இருக்கின்றன: எனினும் இக்கஷ்டகாலத்திலும் அந்நாடு தனது பரம்பரைக் கத்தோலிக்க அனுசரணையைக் கைவிடவில்லை. மக்களின் ஆர்வத்தைக் கண்ட அரசாங்கமும் தமது வலுக்கொள்கைகளை அதிகம் வற்புறுத்தவில்லை: "சென்ற 25வருட காலத்தில் அங்கே புதிய கோவில்கள் சுமார் 1,100 கட்டப்பட்டிருக்கின்றன: இன்று சுமார் 17,700 குருமார் தொண்டாற்றுகின்றனர். கன்னியர்களின் தொகை சுமார் 25,000. பல கத்தோலிக்க கல்லூரிகளும் ஒரு கத்தோலிக்க சர்வகலாசாலையும் உண்டு. சற்பிரசாதத் திருநாள் ஒருபகிரங்க விடுதலைநாள். இவ்வாறு நடந்துவருவது அந்நாட்டின் மக்கள் தமது சமயத்தில் கொண்டுள்ள அழியா அபிமானமே காரணமாகும்."— இவ்வாறு அண்மையில் அந்நாடு சென்றுவந்த திரு. என். பெர்ணாந்து கூறியிருக்கிறார். இவர் இலங்கை—போலாந்து நட்பு இயக்கத்தின் இலங்கைக் காரியதரிசி.

### குறை கூறுவதை நிறுத்தி

## செபமும் தியானமும் செய்வோமாக

மொன்றியேல் நகர அதிமேற்றிராணியாராக இருந்து ஒய்வுபெற்றுப் பின் வளர்ச்சியுறாத நாடுகளில் தேவதொண்டு செய்யத் தம்மை அர்ப்பணித்த கருதினால் லேகர் அடிகள் இந்நாட்களில் திருச்சபையில் குறைகூறும்வேலை மட்டுக்குமிஞ்சிவிட்டதென்றும், அப்படிக் குறைகூறும் கத்தோலிக்கர் யாவரும் குருமாராயிருந்தாலென்ன, பொதுநிலையினராயிருந்தாலென்ன, ஒருவருடத்துக்குக் குறைகூறுவதை விட்டு செபத்திலும், தியானத்திலும் ஒவ்வொரு நாளும் சிலமணித்தியாலங்களைச் செலவுசெய்வாராகில் திருச்சபைக்குப் பெரும் நன்மை விளையுமெனவும் புத்தி கூறியிருக்கின்றார்.

## பத்திரிகையாளரின் விண்ணப்பம்

பத்திரிகைகளுக்கும், கத்தோலிக்க அதிகாரிகளுக்குமிடையில் ஒத்துழைப்புக் குன்றி வருவதாக அவுஸ்திரியா தேசத்தில் ஒன்றுகூடியிருந்த கத்தோலிக்க பத்திரிகை மகாநாட்டில் கலந்துகொண்டவர்கள் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசருக்கு விண்ணப்பம் செய்திருக்கின்றனர். இந்த ஒத்துழைப்புப் போதியளவு இல்லாததே அண்மையில் புனிதர் அட்டவணையில் பாப்பரசர் செய்த மாற்றங்களை மக்கள் விளங்க முடியாதிருந்ததென்று திருஷ்டாந்தமாக எடுத்துக் காட்டினர்.

## "அக்குவைனஸ்" பட்டமளிப்பு விழாவில் பிரதம மந்திரி

இம்மாதம் 15-ம் திகதி கொழும்பு "அக்குவைனஸ்" சர்வகலாசாலைக் கல்லூரியில் நடந்த பட்டம் அளிப்பு விழாவில் பிரதம மந்திரி டட்லி சேனநாயகா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். கல்லூரியின் தலைவர் வணக்கத்துக்குரிய ரிசா பாலசூரியர் சுவாமியார் அவரை வரவேற்றுக் கல்லூரியின் சேவைகளைப்பற்றி, தமது அறிக்கையில் உரைத்தார். பிரதமமந்திரி நாட்டில் அக்குவைனஸ் கல்லூரி செய்துவரும் சேவையை யாவரும் வியந்துகொள்கின்றனரென்றும், அதற்கு மக்கள் என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள் என்றும் கூறினார். மேலும் தொடர்ந்து பேசுகையில், "ஜனநாயகம் தனி நபர் அனுபவிக்கும் சுதந்தரத்தில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. நாட்டில் உள்ள மக்கள் அந்நாட்டிலுள்ள யாவரது மதத்தையும், இனத்தையும், கலாச்சாரத்தையும் மதித்து மரியாதை செய்து வருவதில் பெருமளவு தங்கி இருக்கின்றது" என்றார் பிரதம மந்திரி.

## சர்வதேச இளைஞர் சங்கம்

சர்வதேச இளைஞர்சங்கம் புரட்டாசிமாதம் 25-ந்திகதி தொடக்கம் ஐப்பசி 17-ம் திகதிமட்டும் தமது 4-வது உலகமகாநாட்டை மத்திய கிழக்கு லெபனன்தேச பெயிறூட்நகரில்கூட ஆயத்தங்கள் செய்துவருகின்றது: இக்காலத்தில் இந்த உலக சங்கத்தின் தலைவர் ஓர் இலங்கையர். அவர் நியென்சி ருபசிங்க என்பரே. இக் கூட்டத்தில் இளைஞரை ஊக்கப்படுத்துவதற்காக திரு. நியென்சி அண்மையில் ஒரு பொது அறிக்கையை சகலதேசங்களுக்கும் அனுப்பியிருக்கின்றார். அதில் அவர் இன்று உலகுபடும் இன்னல்களை எடுத்துக்கூறி அவற்றைக்களைய உலக இளைஞர் ஒத்துழைப்பைக் கேட்டிருக்கின்றார். திருச்சபையைப் புதுப்பிக்கவும் அது புது மெருகுடன் தோன்றவும் கத்தோலிக்க இளைஞர்கள் முன்னணியில் நின்று வேலை செய்யத்திட்டம் இடுவதே இந்த 4-வது உலகமகாநாட்டின் பிரதான நோக்கமென எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Christianity — Advanced Level (G. C. E.)

# இரட்சணிய சரித்திரம்

## பழைய ஏற்பாடு

### தேவன் தனது மக்களை விடுவிக்கிறார்

(முன் தொடர்ச்சி)

ஈற்றில் தேவன் தன் மக்களின் துன்ப துரிதங்களைக் கண்டு, மனமிரங்கி அவர்களுக்கு உதவிசெய்ய முன்வருகிறார். மோயீசனுக்குக் காட்சி அளித்து, இஸ்ராயேலரை எகிப்திய கொடுமைகளில் இருந்து விடுவிக்கும் தொண்டை மோயீசனுக்கு ஒப்புவித்தார் (யாத். 3 : 2-8). எரியும் முட்செடியானது தெய்வீக சாங்கோபாங்கத்தின் அறிகுறியாக இருப்பதுடன் எல்லைக்கு அப்பாற்பட்ட தேவனின் தன்மையையும், மாற்றமில்லாத தன்மையையும் காட்டுகிறது. எரியும் சுவாலையின் மத்தியில் தேவன் தன்னைக் காண்பித்து, தான் பிரமாணிக்கமுள்ள தேவன் எனத் தம்மை வெளிப்படுத்தினார். தமது மக்கள்மீது தாம் அக்கறை கொண்டிருப்பதாகவும், அவர்கள் படும் துன்பங்களைத் தான் அறிவதாகவும் வெளிப்படுத்தினார். இதற்குப்பின் மோயீசனுக்கு அவரது அழைத்தலைப்பற்றி வெளிப்படுத்தினார் (யாத். 3 : 10).

பின்பு தன்னுடைய நாமத்தினாலே செயலாற்ற அதற்கேற்ற அதிகாரத்தையும், திடனையும் மோயீசனுக்குக் கொடுத்தார். தான் என்றுமே மோயீசனுடன் இருப்பதாகவும் வாக்களித்தார். தமக்குக் கொடுக்கப்பட்ட தொண்டின் ஆபத்துக்களை நன்கு உணர்ந்த மோயீசன் அதிலிருந்து விலக எத்தனித்துச் சாக்குப்போக்குகளைச் சொல்ல ஆரம்பித்தார். ஆயினும், தான் தேவனால் நியமிக்கப்பட்டிருப்பதை அறிந்ததும் தேவனுடைய ஒத்தாசை தனக்குக் கிடைக்குமென்று மனத்திடம் கொண்டு அத்தொண்டை ஈற்றில் ஏற்றுக் கொண்டார். மோயீசனின் வேண்டுகோளுக்கு இசைந்து தேவனும், "இருக்கிறவர் நாமே" என்று கூறினார். அதாவது, தான் ஒருவரே தேவன் என்றும், தாம் தமது வல்லமையினாலேயே இருப்பதாகவும் வெளிப்படுத்தினார். இதிலிருந்து எகிப்திய தெய்வங்கள் யாவும் பொய் என்பது வெளிப்படையாயிற்று. தமது தெய்வீக நாமத்தை வெளிப்படுத்திய தேவன் தேவவெளிப்படுத்தலின் முக்கிய அம்சத்தைக் கூறினார். அதாவது, மனிதன் இனிமேல் ஒரேஒரு தேவனைப்பற்றிப் பேசவும், அவரின் நாமத்தைச் சொல்லி அழைக்கவும் இயலுமாயிற்று என்பதாம். தமது ஜனத்தை விடுவிக்கும் தலைவனாகப் பதவி ஏற்ற மோயீசன், எகிப்துக்குச் சென்று பார்வோனின் அரண்மனைக்குள் நுழைந்தான். தேவனுடைய நாமத்தினால் இஸ்ராயேலரை விடுதலை செய்யவும், அவர்களைக் கானான் தேசத்திற்குத் திரும்பிப் போகவிடவும் உத்தரவு பிறப்பிக்கும்படி பார்வோனை வேண்டினார் (யாத். 5 : 1).

தனது கட்டிட வேலையில் இஸ்ராயேலர் பெருமளவு உதவி புரிந்ததினால் அவர்களை விடுதலை செய்யப் பார்வோனுக்கு இஷ்டமில்லை. தனது திருப்தியீனத்தைக் காண்பிக்கும் முகமாக அவர்களை மேன்மேலும் துன்பப்படுத்த முற்பட்டான். இதைக் கண்ட மக்கள் முறையிட்டனர். பார்வோனின் மனக்கடினத்தைக் கண்ட மோயீசன் எகிப்து நாட்டின்மீது பல கொள்ளை நோய்கள் வரும்படி சபித்தார். இரத்தம், தவளை, வெட்டுக்கிளி, ஈக்கள், மந்தைகளின் கொள்ளைநோய், நெருப்பு மழை, ஒருவகைப் பூச்சி, இருட்டு முதலிய துன்பங்கள் ஏற்பட்டன. இவற்றைக் கண்டு அரசன் இஸ்ராயேலர்மட்டில் மனம் இளகத் தொடங்கினான். இந்நோய்கள் இயற்கையாக வந்த நோய்களாக இருக்கலாம். ஆனால், இவை மோயீசன் கட்டளை இட்டபொழுது வந்தமையும், எகிப்தியரை மாத்திரம் தாக்கியமையும் குறிப்பிடத்தக்கவை. ஆயினும், பார்வோன் இஸ்ராயேலரை விட்டபாடில்லை. ஆகையால், தேவன் கடைசிக் கொள்ளைநோயை அனுப்பினார். மரணத்தூதன் எகிப்து இல்லங்களைத் தரிசித்து, அவர்களின் தலைச்சன் பிள்ளைகளைக் கொன்றான். பார்வோனின் தலைச்சன் புத்திரனும் இதற்குப் பலியானான். இஸ்ராயேலரின் இல்லங்களின் கதவு நிலைகளிற் செம்மறியின் இரத்தத்தைக் கண்ட மரணதூதன் அவர்களுக்கு யாதொரு தீங்கும் செய்யாது சென்றார். இஸ்ராயேலரின் தலைச்சன் பிள்ளைகள் இவ்வாறு காப்பாற்றப்பட்டதைப் பாஸ்காப் பண்டிகையில் யூதர்கள் பிற்காலத்தில் நினைவுகூர்ந்து கொண்டாடினர். யூதர்களின் பாஸ்காப் பலியானது சிலுவை மரத்தில் கிறீஸ்துவின் பலியை முன்னறிவித்தது. தாம் எகிப்தை விட்டுச் செல்லமுன் செம்மறியின் இரத்தம் எவ்வாறு இஸ்ராயேலரைக் காப்பாற்றியதோ அதேபோல சிலுவையில் கிறீஸ்துவின் மரணமும் பாவத்தின் அடிமைத்தனத்தில் நின்று மனுக்குலத்தைக் காப்பாற்றி நரகத்தினின்றும், பாவத்தினின்றும் அவர்களை இரட்சித்தது. கடைசியாக ஏற்பட்ட தொற்றுநோய் எகிப்தியருக்கு ஒரு தேசியகேடாக அமைந்தது. ஆகையால், மோயீசனின் வேண்டுகோளுக்குப் பார்வோன் இணங்கினான் (யாத். 12 : 30).

#### யாத்திராகமம்

இஸ்ராயேலர் தமது தளபாடங்கள்யாவற்றையும் மூட்டை கட்டித் தேவன் கூறியபடி செம்மறியின் மாமிசத்தைப் புசித்தபின்பு மோயீசனின் தலைமையில் விரைவாக எகிப்தை விட்டுப் புறப்பட்டனர். இவ்விதமாகக் கிறீஸ்து உயிர்த்த இரவன்று "எக்சல்ரெற்" (Exultet) என்னும் மங்கள கீதத்திற் பாடுவது போலத் தேவன் தமது எதிரிகளை ஜெயித்தார். அதே இரவில் தான் மோயீசனும் தேவனின் மக்களை எகிப்திய அடிமைத்தனத்தில் நின்று விடுவித்து வாக்குப்பண்ணப்பட்டபூமிக்கு அழைத்துச்சென்றார். இந்த யாத்திரையானது கி. மு. 1225-ல் நடைபெற்றது. கானானுக்குப் போகும் நேர்வழி வடக்குநோக்கி இருந்தது. இதைப் "பிலிஸ்தியரின் பாதை" என்று அழைப்பர். ஆனால், இப்பாதையில் எகிப்திய காவலர்கள் மிகுந்துஇருந்தனர். ஆகையினால், மோயீசன் இப் பாதையை விட்டுத் தெற்கு நோக்கிச் செல்லும மாதியான் வனாந்தரத்துக் கூடாகச்சென்றார். இவ்வனாந்தரத்திற் தேவன் மோயீசனுக்கும் இஸ்ரவேலருக்கும் தெரியாமல் தமது ஜனங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தார். செங்கடலுக்கூடாகவும், எகிப்திய குதிரைப்படையின் கைகளிலிருந்தும் தனது மக்களைக் காப்பாற்றிப் பகலில் முகிலாகவும், இரவில் அக்கினித் தூணாகவும் வழிகாட்டி இஸ்ராயேலரை அழைத்துச் சென்றார். இவர்களுக்குச் செங்கடல் பிரிந்து வழிவிட்ட நிகழ்ச்சியானது இவர்கள் அங்கு சென்ற காலத்தைப் பொறுத்திருந்தது. எகிப்தியர் இவர்களைப் பின்தொடர்ந்தபொழுது அதே நிலமானது கடலாக இருந்தது. இதுவும் காலநிலையைப் பொறுத்தது.

#### சல்லாபம்

1. யாக்கோபின் புத்திரர்களை எகிப்துக்குக் கொண்டு சென்றதில் தேவன் கொண்டிருந்த திட்டம் யாது?

2. இஸ்ராயேலரின் தலைவராகவும், விடுதலை வீரனாகவும் மோயீசனை ஆக்குவதற்குத் தேவன் எவ்வாறு அவரை ஆயத்தம் செய்தார்?

3. மோயீசனின் வாழ்க்கையும் தொண்டும் கிறீஸ்துவின் வாழ்க்கையையும் தொண்டையும் எவ்வழிகளில் முன்னறிவித்தன?

4. செங்கடலின் தண்ணீர் ஞானஸ்நானத்தின் தண்ணீரை முன்னறிவிக்கிறது. ஞானஸ்நானம் என்னும் தேவதிரவிய அநுமானமானது செங்கடலைக் கடந்தமையை எவ்வாறு ஒத்திருந்தது?

5. உமது பூசைப் புத்தகத்தில் அல்லது திருச்சபைச் செபங்களிலிருந்து கிறிஸ்துநாதர் பாஸ்காச் செம்மறிப் புருவையாக அழைக்கப்படும் பகுதியைத் தெரிந்தெடுத்து இவை கிறிஸ்துவைப்பற்றியும், திருச்சபையைப் பற்றியும் எவற்றைப் படிப்பிக்கின்றன என்பதை விளக்குக.

வளரும்.

## யாழ்நகர் உளவியற் சங்கம்

இச்சங்கத்தின் மாதாந்தக்கூட்டம் அடுத்துவரும் சனிக்கிழமை (26-7-69) மாலை 5 மணிக்கு திருக்குடும்பக் கன்னியர்மடப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

அத்தருணம் திரு. K. நேசையா, M. A. அவர்கள் ஆங்கிலத்தில் "சமூகவிருத்தி" என்றோர் சொற்பொழிவாற்றுவார்.

## கேட்டேன்! ரசித்தேன்! வியந்தேன்!

### "கவலையின் எல்லை"

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் அருளிய ஏடுகளுள் "சமூகத்தொடர்புக் கருவிகள்" பற்றியதும் ஒன்றென்று பலர் அறிவர். அதில் கூறப்பட்டவாறு கால, சூழ்நிலைகளின் தேவைகளுக்கேற்ப சமூகத் தொடர்புக் கருவிகளைப் பல்வேறு அப்போஸ்தல அலுவல்களில் பயன் தரும் முறையில் கையாளத் திருச்சபையின் மக்கள் அனைவரும் ஒருமித்த உள்ளத்தோடும், திட்டத்தோடும், உடனடியாகவும் முழு ஆற்றலுடன் முயல்வார்களாக" (பக்கம் 356).

இலங்கை வானொலியில் கத்தோலிக்க நிகழ்ச்சியை இடையிடையே திருமறைக் கலாமன்றத்தினர் அளித்துவருவது மிகவும் விரும்பத்தக்கது—மெச்சத்தக்கது.

சென்ற 21-7-69 திங்கட்கிழமை மாலை 7-03 — 7-35 வரை அவர்கள் நிகழ்த்திய "கவலையின் எல்லை" என்னும் இசை-உரை-நாடகச் சித்திரம் என்ற யோபுவின் சரிதை மிகவும் கவர்ச்சிக்குரியதாயிருந்தது. அது சிந்தைக்குப் பயனை அளிக்கும் சொல்லோவியமும், செவிக்கு இன்பத்தையளிக்கும் இசைத்திறனும் அடங்கியுள்ளதாயிருந்தது. அந்நிகழ்ச்சியில் பரப்பப்பட்ட சில வசனங்கள் கேட்டோர் நெஞ்சை என்றும் விட்டகலா. 'தங்கம் புடமிடப் படுவது ஏன்? தூய்மை பெறுவதற்காக', 'சந்தனம் அரைக்கப் படுவது ஏன்? நறுமணத்தை அளிப்பதற்காக', 'பொறுமைக்குப் பரிசு பெற்றார் யோபு', 'துன்பம் வருவது குற்றம் செய்வதற்காக அல்ல' என்பன போன்ற பொன்மொழி வாக்கியங்கள் பல சிந்தைக்குச் சிறந்த உணவாகத் திகழ்ந்தன.

ஈற்றில் 'உள்ளம் துன்பத்தினால் தூய்மைப் படுத்தப் படலாம். ஏனெனில், இவ்வுலகில் சகலருக்கும் துன்பம் வந்தே தீரும். அதை நல்ல மனதுடன் சகித்து ஏற்று வாழ்வதிலேயே ஒருவன் முழுமனிதனாக—புனிதனாக வாழமுடியும்" என்ற புத்திமதியுடன் அந் நிகழ்ச்சி முடிவடைந்தது.

இந்நிகழ்ச்சியைத் தயாரித்த வண. நீ. மரியசேவியர் அடிகளாருக்கும், அவரது கோஷ்டியினருக்கும் எமது மனம்நிரம்பிய வாழ்த்தைக் கூறி, இன்னும் இவைபோன்ற பல நிகழ்ச்சிகள் வானொலியில் அவர்களால் பரப்பப்படவேண்டுமென்று வேண்டி நிற்கிறோம்.

— பி. எஸ்.

## விற்பனைக்கு

நாரந்தனையில் பாடசாலைகளுக்கு அண்மையிலும், சம்பேதுரு சம்பாவிலு கோவிலுக்குச் சமீபமாகவும் ஊர்காவற்றுறைப் பட்டினத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல் எல்லைக்குள்ளும் அடங்கிய $17\frac{1}{2}$ நெற் பரப்புக்காணி ஒன்று விற்பனைக்கு உண்டு.

குடியிருப்புச் சூழலுக்குள் அமைந்ததும், நல்ல குடிநீர்க் கிணற்றைக்கொண்டதும், கட்டிடம் கட்டுவதற்கு உகந்ததுமான சிறந்த காணி.

தேவையானோர் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதவும்.

**P. J. கொன்ஸ்ரன்ரைன்,**
**8, ஆசனக் கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## நற்புகழ் நாமம் வாழ்க!

அன்று நீர் கொண்டநிலை
அகண்டதோர் பூமிகண்டு
அலைகடல் ஒளிஉண்டாக்கி
அடர்ந்ததோர் காருண்டாக்கி
அவனியை அழகு செய்ய
ஆதாமோ டேவாளாக்கி
அரும்பொருள் ஆற்றல் தந்தாய்
பரம்பொருள் நீயேவாழ்க!

இகபர சுகங்கள் தந்தாய்
இனியதோர் வாழ்வு தந்தாய்
இறைவனை அறிய வைக்க
திருமறை ஒன்று தந்தாய்
போதவே உந்தன் நாமம்
புவி யுளோர் இயம்புதற்கு
அரியதோர் மொழியைத் தந்தாய்
அமலனே நீயே வாழ்க!

இத்தனை சுகங்கள் தந்தும்
அத்தனை நினையாமல் நாம்
மெத்தவே செய்த பாவம்
தப்பிலா தகற்ற வந்து
சித்தமா மரியாள் தாயின்
சிறுவனாய் நீ பிறந்து
உத்தரித் தெம்மை மீட்ட
கத்தனே நீயே வாழ்க!

ஒப்பிலா மணியே வாழ்க!
தப்பிலா மதியே வாழ்க!
மெய்ப்பொருள் நீயே வாழ்க
கற்புடை மலரே வாழ்க!
அற்புதக் கோவே வாழ்க!
சொற்பொருள்நீயேவாழ்க
தற்பரர் தந்தாய் வாழ்க!
நற்புகழ் நாமம் வாழ்க!

—முல்லைநாதன்

அன்பர் அரங்கு

## "மீட்புப் பணியில் பங்குபெறுவதே அப்போஸ்தலத்துவமாகும்"

என 12-7-69-ல் யாழ்ப்பாணம், டி மொன்போட்சாலையில் நடைபெற்ற அன்பர் அரங்கத்தின் 6-வது அமர்வில் திரு. சிப்றியன் அவர்கள் எடுத்துரைத்தார்.

அவர் தமதுஉரையில் மேலும் கூறியதாவது: அப்போஸ்தலன் என்றால் அனுப்பப்பட்டவன். கிறிஸ்து தம் சீடர்களை அனுப்பியபோது எந்தக் கண்ணோட்டத்தில் அனுப்பினார் என்பதை நாம் சற்றுச் சிந்திக்க வேண்டும். பொதுநிலையினர் என்ற சொல் குருகுலத்தாரும் திருச்சபையின் இசைவு பெற்ற துறவறநிலையினரும் நீங்கலாக ஏனைய எல்லா விசுவாசிகளையும் குறிக்கும். இவர்கள் ஞானஸ்நானத்தின் மூலம் இறைவனின் மக்களாக இணைக்கப் பெற்று, கிறிஸ்துவின் ஒரே உடலில் ஒரே தலையின்கீழ் அமைக்கப்பட்டுள்ளனர். ஆண்டவனின் அருட்கொடைகளினாலும், மீட்பரின் அருளினாலும் தங்கள் முழு ஆற்றலுடன் திருச்சபைக்கு வளர்ச்சி அளிக்கவும், தொடர்ந்து அதைப் புனிதப் படுத்தவும் உழைக்கும்படி அழைக்கப் பெறுகின்றனர். ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல் ஆகியவற்றின்மூலம் அதிகார பூர்வமாக அனுப்பப்பெற்றிருக்கின்றனர். எனவே கிறிஸ்துவின் நற்செய்தியை எடுத்து முழங்கி, அவரது மீட்பையும் எடுத்துரைக்கவேண்டும். திருச்சபையின் வளர்ச்சிக்குத் தேவையானவற்றைத் தாங்களாகவே உணர்ந்து நிறைவேற்ற வேண்டும். திரு ஆட்சியாளருக்குப் பக்கபலமாகத் திகழவேண்டும்.

[தொடர்ச்சி 5-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவில்லுத் திருச்சேத்திரம்

ஆசிரியர்: திரு. வீ. எஸ். பிள்ளை, நரக்களி

கற்பிட்டிக் குடாநாட்டில் 16ஆம், 17ஆம் கல்லுகட்கிடையில், மேற்கே இரண்டு மைல் தூரத்தில் இந்துசமுத்திரக் கரையோரமாக விருக்கும் தலைவில்லுக் கிராமமானது, இன்று பெரிய நகரம் போல் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் இங்கு வருவதுண்டு. பல தெருக்களும், தெருக்கள் தோறும் தங்கு விடுதிகளும், போசன சாலைகள், மற்றும் பல வியாபார ஸ்தலங்களும் வரிசை வரிசையாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.

கிராமத்தின் நடுவே கம்பீரமாகக் காட்சியளிக்கும் பிரமாண்டமான ஆலயத்தின் தோற்றமும், அவ்வாலயத்தின் உள்ளும் புறமும் அலங்கரிக்கப்பட்டிருக்கும் சோடினைகளும், சேத்திரத்தின் நடுவிலுள்ள சிங்காரப் பதுமபீடத்தின்கண் கிருபாசனங் கொண்டெழுந்தருளியிருக்கும் அர்ச். ஆனாள் முனீஸ்வரியின் அருள் நோக்கும், மக்கள் தாயாரின் சந்நிதியிலிருந்து மண்டியிட்டுக் கண்ணீர் வடித்தழுது வேண்டுதல் செய்யும் காட்சியும், கல்மனத்தையும் கரையச் செய்யும் அற்புத சக்தி வாய்ந்தவை.

அர்ச். அன்னம்மாளின் ஜீவிய வரலாறு மிக அற்புதமானது. கிறீஸ்து பெருமானின் தேவதாயாராகிய அர்ச். கன்னிமரியாளின் வரலாறு பரிசுத்த வேதாகமத்தில் கூறப்படவில்லையாயினும், கிறிஸ்தவ இதிகாசங்களில் மிகப் பழையதான அர்ச். யாக்கோப்பின் பூர்வ சுவிசேஷத்தில் ஓரளவு கூறப்பட்டுள்ளது. இந்நூல் கிரேக்க பாஷையில் கி. பி. 150ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. சிறந்த செல்வமும், தர்மகுண சிந்தையுமுள்ள நசரேத்து வாசியான இஸ்தொல்லான் என்ற புண்ணியவானுக்கும், சற்குணவதியான எமரேஞ்சியாவுக்கும் மூன்றாவது புத்திரியாகக் கார்மேல் மலைக்கு வடக்கே, நசரேத்திலிருந்து இரண்டு மைல்களுக்கப்பாலுள்ள செப்பொரிஸ் என்னும் சிறு கிராமத்தில் அன்னம்மாள் திருவவதாரஞ் செய்தாள்.

சிறு பராயத்திலேயே கார்மேல் மலைச்சந்நியாசிகளிடம் உலக இரட்சகரின் பிறப்பைப் பற்றிய தீர்க்க தரிசனங்களை ஊன்றிப் படித்துச் செபத்திலும் தவத்திலும் ஒறுத்தலிலும் ஞான முயற்சிகளிலும் ஈடுபட்டுச் சன்மார்க்க சீலியாக வாழ்ந்து வந்தாள். ஆனா என்ற அவளது திருநாமத்தின் பொருள் வரப்பிரசாதம் என்பதாகும்.

ஆனாளின் பன்னிரெண்டாம் பிராயத்திலேயே அவரின் தாயார் பரமபதமடைந்தாள். பின்னர் தந்தையின் பராமரிப்பிலே வளர்ந்துவந்த அன்னம்மாளுக்கு, இருபதாம் வயதில் இருபத்தொரு வயதுநிரம்பிய நசரேத்து வாசியான சுவக்கீன் என்னும் வாலிபனுக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். இவ்விளந் தம்பதிகளை அர்ச். தொபியாசின் சரித்திரமே தேவதொண்டிலும், தருமகைங்கரியங்களிலும் மென்மேலும் ஈடுபடத் தூண்டியது. பத்திமான்களான இத்தம்பதிகட்கு இருபது வருடங்களாகப் புத்திர பாக்கியம் கிடைக்கவில்லை.

சோகத்தால் சுவக்கீன் வீட்டைவிட்டு வெளியேறிக் காட்டிற்குச் சென்றார். காட்டிலே உபவாசமாயிருந்து இறைவனை வேண்டுதல் செய்யத் தொடங்கினார். கணவனின் பிரிவைச் சகியாத அன்னம்மாளும் பிள்ளையில்லாக் குறைதீர அருள்புரியும்படி சதா அமலனைத் தியானித்துக் கொண்டு பூங்காவொன்றில் தனிமையாக வாசஞ் செய்தாள்.



ஒருநாள் தேவதூதன் அன்னம்மாளுக்குத் தரிசனையாகி "ஓ அன்னம்மாளே! உம்முதரத்தில் ஒரு குழந்தை உற்பத்தியாகும். அப்பிள்ளை முழு உலகத்தினதும் பிரகாசத்திற்குக் காரணமாயிருக்கும்" என்று கூறி மறைந்தார். இவ்வாறே தேவதூதன் சுவக்கீனுக்கும் திருவுளம் பற்றினார். இவ்வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த இருவரும் இறைவனுக்கு நன்றிசெலுத்திவிட்டுத் தமதில்லம் திரும்பி நிம்மதியாக வாழ்ந்திருந்தனர்.

சிலநாட்களால் கர்ப்பவதியான அன்னம்மாள் மரியாள் என்னும் பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். மரியாளைத் தேவாலயத்தில் காணிக்கையாக ஒப்புக் கொடுத்தபின் சுவக்கீன் இறந்தார். வயோதிபப் பராயத்தில் அன்னம்மாளும் இறக்க அவளது திருச்சடலம் யெருசலேமில் அடக்கம் செய்யப்பட்டது. யெருசலேம் பட்டினத்தில் அர்ச். அன்னம்மாளின் பெயரால் கட்டப்பட்ட முதலாவது தேவாலயத்தில் இவளது கல்லறையை இன்னும் காணலாம்.

அர்ச். ஆனாள் முனீஸ்வரியின் திருச்சேத்திரம் தலைவில்லுக் கிராமத்தில் இருப்பதாலேயே, இக்கிராமம் இலங்கைக் கிறிஸ்தவர்களின் புனித யாத்திரைத் தலமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இச்சேத்திரம் அமைக்கப்பட்ட அற்புத வரலாறு பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

கி. பி. 1606-இல் கத்தோலிக்க யேசுசபைக் குருமார் இலங்கையில் தம் சமயப்பணியை ஆரம்பித்தனர். புத்தளத்தின் உதவி மாகாண அதிபராயிருந்த திரு. டப்ளிவ் சி. மெக்றெடி என்பவரால் 1867-இல் எழுதப்பட்ட அறிக்கையொன்று பின்வருமாறு கூறுகின்றது. 17ஆம் நூற்றாண்டில் ஓர் ஏழைப் போர்த்துக்கேயன மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்தான். கொழும்பில் தொழில் கிடையாததால், மிகுந்த கவலையுடன் மீண்டும் கால்நடையாக மன்னாருக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். தனக்குண்டான களையைத் தீர்க்கும் பொருட்டுத் தலைவில்லில் தற்போது திருச்சேத்திரம் கட்டப்பட்டுள்ள இடத்திலிருந்த ஒரு பெரிய அரச மரத்தடியில் படுத்துறங்கினான்.

அவ்வேளை எரிந்து கொண்டிருக்கும் இரு மெழுகுவர்த்திகட்கிடையே ஒரு சொரூபம் இருக்கக்கண்டான். அச்சமிகுதியினால் எழுந்து பார்த்தான். உண்மையாகவே அர்ச். அன்னம்மாள் சோதிப் பிரகாசத்தின் நடுவே காட்சியளித்து, "இது எனது சாயலாகும். இவ்விடத்திலே எனது பெயரால் ஓர் ஆலயத்தைக்கட்டி எனது சொரூபத்தை அதில் வைப்பாயாக!" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்து சென்றார். இவற்றைக்கேட்ட போர்த்துக்கேயன் முழந்தாளிட்டு வணங்கியபின், ஓடோடியுஞ்சென்று [illegible] குறிஞ்சம்பிட்டி என்னும் கிராமத்தில் கம்பு தடி முதலிய பொருட்களைக் கொண்டுவந்து ஒரு குடிசைக் கோயிலைக் கட்டினான்.

இவ்வாறு கட்டப்பட்ட திருச்சேத்திரத்தில் அற்புதங்கள் நாளாவட்டத்தில் அதிகரிக்கவே அன்னையின் மகிமைப் பிரதாபம் நாடெங்கும் பரவத் தொடங்கிற்று. அதனால் ஆலயத்திருப்பணி வேலைகளும் அபிவிருத்தியடையத் தொடங்கின. 1834ஆம் ஆண்டில் சரித்திர அறிஞர் திரு. சைமன் காசிச் செட்டியவர்களால் எழுதப்பட்டுள்ள சரித்திரக் குறிப்பில் வண. பேதுரு கைத்தாரேசுவாமியாரே புதிய தேவாலயத்திற்கு அத்திவாரக்கல் நாட்டியவரெனக் கூறப்பட்டுள்ளது. பொஞ்சின் அதிமேற்றிராணியாண்டவரால் உரோமாபுரியில் இருந்து கொண்டு வரப்பட்ட தாயாரின் திருப்பண்டத்தை இன்னும் இச்சந்நிதியில் காணலாம்.

தலைவில்லுத் திருச்சேத்திரத்தின்புகழ் 19ஆம் நூற்றாண்டில் இந்தியா தேசமெங்கும் பரவத்தொடங்கியது. 1950-ம் ஆண்டில் இத்திருப்பதிக்குப் பாதை போடப்பட்டதிலிருந்து யாத்திரிகரின் தொகை வரவர அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இவ்வாண்டிலேயே நூற்றாண்டு மகோற்சவமும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. திருச்சேத்திரத்தின் சுற்றாடல் இன்று மீன்பிடித் தொழிலில் அபிவிருத்தியடைந்த ஒரு கிராமமாக விளங்குகின்றது.

அன்னை சந்தானாள் நாயகியின் திருச்சேத்திரத்தில் தற்போது இரு பெரிய மகோற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

ஒன்று ஆடி மகோற்சவம்; இதுவே பெரிய மகோற்சவமாகும். இவ்விழா முதலாம் விழா, இரண்டாம் விழாவென இரு விழாக்களாகக் கொண்டாடப்படும். முதல் விழா முன்னர் கண்டித் தேயிலைத் தோட்டத் தமிழர்களால் கொண்டாடப்பட்டுவந்தது. சமீபத்தில் சில ஆண்டுகளாகக் கண்டித்தமிழர் விழாக்கொண்டாடுவதைக் கைவிட்டமையால், கற்பிட்டிக் குடாநாட்டைச் சேர்ந்த தமிழர்களே இவ்விழாவைக் கொண்டாடி வருகின்றனர். இரண்டாவது விழா நீர்கொழும்பு, சிலாபப் பகுதி மக்களால் கொண்டாடப்படும்.

அடுத்தது பங்குனி உற்சவம். இவ்வுற்சவம் 7-ம், 10-ம் திகதிகளில் இரு விழாக்களாகக் கொண்டாடப்படும். முதல் விழா கொழும்பு முகத்துவார மக்களாலும், இரண்டாவது விழா லுணுப்பொக்குவா வாசிகளாலும் கொண்டாடப்படுவது வழக்கம். கடந்த சில வருடங்களாக மார்கழி மாதம் 8-ந் திகதியும் ஒரு விழாக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆடிமாதம் 26-ந்திகதி கொண்டாடுவதற்குத் திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட அர்ச். அன்னம்மாளின் மகோற்சவம் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமைகளிலேயே கொண்டாடப்படுவது வழக்கமாகிவிட்டது. வழமைப்பிரகாரம் இவ்வாண்டும் 13-ந்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வரும் மங்கள மகோற்சவம் 26-ந்திகதி மாலையாராதனையுடனும், 27-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பாடற்பூசையுடனும், பூசைக்குப் பின்னர் திருச்சுரூப ஊர்வலத்துடனும், பக்தியருட்சிக்குரிய விதமாய் முற்றுப்பெறும். அன்னையின் சந்நிதியை அண்டி ஆயிரக்கணக்கான மக்கள் கும்பல் கும்பலாக வந்து குழுமிக் கொண்டிருக்கின்றனர். யாத்திரிகர்க்கான சகல வசதிகளும் திருச்சேத்திரத்தில் செய்யப்பட்டுள்ளன. சாதி மதபேதமின்றிச் சந்தானாள் சந்நிதியில் தெண்டனிட்டு வேண்டுதல் செய்யும் அடியார்க்கு அன்னையின் திருவருள் என்றென்றும் கிடைப்பதாக!

## நிலாவை வென்ற மனிதர்

சந்திர மண்டலம் சென்றதினால் — பெருஞ்
சாதனை ஒன்றினை நாட்டிவிட்டார்
விந்தையிது பெரும் விந்தையெனச் — சொல்லும்
வீரவர லாற்றைச் செய்துவிட்டார்!

பொய்யாய்க் கதைகளைச் செய்ததினால் — இந்தப்
பூவிற் சிறியஅச் சந்திரனை
தெய்வமென்று முன்னோர் நம்பியதை — மேலைத்
தேசத்தவர் இன்று மாற்றிவிட்டார்!

கற்பனை குதிரையை ஓட்டுவதில் — வெற்றி
கண்ட எங்கள்கவிக் கூட்டத்தினர்
அற்புதமான வொரு கவிப்பொருளாம் — அந்த
அம்புலிக்கினி யென்ன செய்வாரடா?

அல்லி மலர்தன் காதலனை — இந்த
அமெரிக்க வீரர்கள் பிடித்ததினால்
சொல்ல முடியாத வேதனையால் — மனம்
சோர்ந்து கிடக்கிறாள் பாரடா?

வெற்பும் குழிகளும் நிறைந்ததினால் — அந்த
வெண் ணிலாவை இளமங்கையரின்
சிற்பமுகம் போல் உள்ளதென்று — கவி
செய்ய இனியார் வருவாரடா?

— வாகரை வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. A. ஞானப்பிரகாசம்

"காவலன்" பத்திரிகையின் ஆசிரியராய்ச் சுமார் 48வருட காலம் சிறப்பாகக் கடமையாற்றிவந்த திரு. ஏ. ஞானப்பிரகாசம் அவர்கள் சென்ற மாதம் 28-ந் திகதி ஓய்வுபெறலாயினர்.

இவர் பயிற்றப்பட்ட ஒரு ஆசிரியராயிருந்தபோது யாழ். மேற்றிராணியாராய் இருந்த மகாவந். ஜே. ஏ. புரூ ஆண்டகைஅவர்களால் இப் பொறுப்புவாய்ந்த பதவிக்கு 1921-ம் ஆண்டு ஆனி மாதம் 1-ம் திகதி நியமிக்கப்பட்டார். அன்றுதொட்டு அவர் இப் பத்திரிகையின் ஆசிரியராயிருந்து திருச்சபைக்கும் எம் நாட்டுக்கும் செய்த பணி பெரிதும் போற்றற்குரியதாகும்.

யாழ். மேற்றிராணியாராக இருந்த ஜே. ஏ. கியோமார் ஆண்டகை அவர்கள் காலத்திலும், அவருக்குப்பின் தற்போது மேற்றிராணியாராக இருக்கும் ஜே. எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை அவர்கள் காலத்திலும் இப் பெரியார் தமது பரந்த அறிவாலும் சிறந்த எழுத்தாலும் ஆற்றிய சேவை சொல்லுந்தரமன்று.

அவர் திருச்சபைக்குச் செய்த மகத்தான சேவைக்கு ஒரு சின்னமாக 1962-ம் ஆண்டில் "புரூ எக்கிளேசியா எற் பொன்ரிபிச்சே" என்ற தங்கப் பதக்கம் பரிசுத்த பாப்பரசரால் வழங்கப்பட்டது.

"அந்தக்காலத்தில் இப்பத்திரிகையில் தர்க்கம், புதினம், கதைகள் ஆதியன முக்கிய இடம் பெற்றன. ஆனால், தற்போது காலத்துக்கேற்ற திருத்தங்களுடன்— மாற்றங்களுடன் இப்பத்திரிகை காட்சியளிப்பது வரவேற்கத்தக்கதே" என்று அவர் எமக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டார்.

இப் பெரியார் தற்போது 76 வயதை அடைந்தபோதிலும் இளமையும், சுறுசுறுப்பும், இன்முகமும், புன்சிரிப்பும் நிரம்பிய ஒருவராகவே காணப்படுகிறார். இவருடைய இளைப்பாற்றிக் காலம் நீடியதாகவும், சுகமும் பெலமும் நிரம்பியதாகவும் இருக்க இறைவன்துணைபுரியவேண்டுமென்பதே இவருடைய நண்பர்களினதும் வாசகர்களினதும் இதயங் கனிந்த மன்றாட்டு.

வாழ்க எம் பத்திராசிரியர்!

# மனிதன் சந்திரனில் கால்வைத்து விட்டான்

1969-ம்ஆண்டு ஆடிமாதம் 21-ம் திகதி உலகசரித்திரத்திலே பொன் எழுத்துக்களால் வரையப்படவேண்டிய நாளாகும். அன்றுதான் முதன்முதல் மனிதன் சந்திரனில் கால்வைத்தநாள். பல ஆயிரக்கணக்கான வருடங்களாகச் சந்திரனை அண்டி அதன் மர்மங்களை அறியக் கண்டுவந்த கனவு அன்று நனவாயிற்று. இதற்கு உழைத்துவந்தவர்பலர். சந்திரனைப்பற்றிய தகவல்களை பல நூற்றுக்கணக்கான வருடங்களாக பல தேசங்களுக்குரியவர்களும், பல சமயத்துக்குரியவர்களும் சேகரித்து வந்திருக்கின்றனர். ஆனால் அங்கு செல்வதை அண்மையில் தீவிரப்படுத்திய பெருமை ரூஷிய தேசத்தவர்களுக்கும் ஐக்கிய அமெரிக்க தேசத்தவர்களுக்குமே பிரதானமாக உரியது. இவர்கள் யாவரதும் பெருமுயற்சியின்பயனாக, இம்மாதம் 21-ந் திகதி ஐக்கிய அமெரிக்காவுக்குச் சேர்ந்த நீல் ஆமஸ்ற்ரோங், எட்வின் அல்ட்றிங், மைக்கல் கொலின்ஸ் என்னும் மூன்று வீரர்களும் சந்திரனுக்குச் செல்லும் அரும்பெரும் சாதனையை முடித்துவிட்டனர். கேப் கெனடி முனையிலிருந்து வெடித்த றொக்கட் அவர்களைப் பூமியின் ஈர்ப்புச் சக்திக்கு அப்பால் கொண்டு செலுத்திவிட அதன்பின்பு அவர்கள் நடத்திய நவீன விஞ்ஞான சாதனைகளால் அவர்கள் சந்திரனின் ஈர்ப்புச் சக்திக்குள் சேர்க்கப்பட்டனர். இந்நிலையில் அவர்களில் இருவரான நீல் ஆமஸ்ற்ரோங் என்பவரும் எட்வின் அல்டிங் என்பவரும் தாய்க்கப்பலிலிருந்து பிரிந்து ஒரு சிறு கலத்தில் சந்திரனில் மெதுவாய் அமர்ந்து, பின் அதில் கால்வைத்து, சிறிதுநடந்து அங்கிருந்து மண், கல் முதலியபொருட்களை எடுத்துக்கொண்டும் நேராகப் பல விஷயங்களை அவதானித்துமிருக்கிறார்கள். உலகின் பல பாகங்களிலும் உள்ளவர்கள் இச்சாதனையில் காட்டிய நல்லன்பும் நாட்டமும் வேறு எவற்றிலும் ஒருபோதும் காணப்படவில்லை. இதுபோன்ற சாதனையை மனிதன் ஒருபோதும் செய்ததேஇல்லை என்பதே இதற்குக் காரணம். தேவனது படைப்புக்களைச் சிறிது சிறிதாகக் கண்டறியும் சிற்றறிவுடையமனிதன் அவரது மாபெருமையை உணர்ந்து அவரை என்றும் தோத்திரிப்பானாக.

> சந்தனம் வைக்கப்பெற்ற கிண்ணமும், சாணம்வைக்கப்பெற்ற கூடையும் தம்மிடமுள்ள பொருள்களின் குணத்தாலும், மணத்தாலும் முறையே புகழையும் இகழையும் எய்தல்போல மக்கள் தம் வாய்ச்சொற்களின் வகையால் நல்லாரெனவும், பொல்லாரெனவும் பெயர் பெறுகின்றனர்;

ஜெபமென்பது இறைவனுடன் இதயம் ஒன்றுபட்டுச் சம்பாஷித்தலே.

—அவிலா, தெரேசா.

"சங்கிலி அரசன்"
(வரலாற்று நாடகம்)
சம்பத்திரிசியார் கல்லூரி நாடகக் குழுவினரால்
கட்டிட நிதிக்காக
28—7—69 பி. ப. 6-30 மணிக்கு
கல்லூரி மண்டபத்தில் நிகழும்.
பிரவேசம்: ரூபா 5-00, ரூபா 3-00
போஷகர்: ரூபா 25-00

# ரூஷியப் புரட்சி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டின் ஒரு சட்டப்படி 12 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் வேலைசெய்யும் நேரம் 8 மணித்தியாலம் என வரையறுக்கப்பட்டது. ஆனால், 12 வயதுக்கு மேற்பட்டவர்கள் நாளொன்றுக்கு 12தொடக்கம் 14மணிவரை வேலைசெய்யும்படி கட்டாயப் படுத்தப்பட்டனர். தொழிலாளர்களின் கூலியும் மிகவும் குறைவாகவே இருந்தது. இந்தக் குறைந்த கூலியிலும் தொழிலாளர்கள் சிறுசிறு குற்றங்களுக்காகத் தண்டனைப் பணம் கட்டவேண்டி இருந்தது. இந்தத் தண்டனைப்பணமே சில வேளைகளில் வருமானத்தில் மூன்றில் இரண்டுபங்காக இருந்தது.

இதன் விளைவாகக் கிராமப்புற விவசாயிகளுக்கும், நகரப்புற தொழிலாளர்கட்கும் பொருட்களை வாங்கும் சக்தி இருக்கவில்லை. உற்பத்தி அதிகரித்தது. ஆனால் நுகர்வோர் இல்லை. இதனால் வேலையில்லாத் திண்டாட்டமும், குறைந்த கூலிமட்டமும் நிலவியது.

சமுதாயத்திலுள்ள இவ்விரு சாராரின் நிலை இவ்வாறாகக் கல்வியறிவுபெற்ற மக்களின் நிலையும் மோசமாக இருந்தது. இவர்களின் வாழ்க்கைமுறையும் எண்ணங்களும் மேல்நாட்டு நாகரிகத்தை ஒத்திருந்தது. இதனால் பின்தங்கியிருந்த ரூஷியமக்களுக்கும் இவர்களுக்கும் தொடர்பில்லா திருந்தது. இவர்களுடைய சமதர்மக்கொள்கைகள் காரணமாக இவர்களுக்கு அரசாங்க உத்தியோகங்கள் மறுக்கப்பட்டது. எனவே, மாக்ஸீய சித்தாந்தம் வந்தபோது அதை வரவேற்கத் தயாராக இருந்தனர்.

இத்தகைய நிலைமையிலேயே 1905-ம் ஆண்டில் ரூஷியா ஜப்பானுடன் போர்செய்து தோல்வியுற்றது. இத்தோல்வியானது எதேச்சாதிகார ஆட்சியின் பலவீனத்தை மக்களுக்குத் தர்க்கரூபமாக எடுத்துக்காட்டியது. போரினால் ஏற்பட்ட விளைவுகளும் பாரதூரமாக இருந்தது. உணவுப்பஞ்சம் தாண்டவமாடியது. வேலைநிறுத்தங்கள் பலஏற்பட்டன. இராணுவத்தினரும் தம் அதிருப்தியைக் கிளர்ச்சிகள்மூலம் காட்டினர். ஆனால் 'சார்' புரட்சியைக் கடுமையாக அடக்கினான். சீர்திருத்தங்கள் வழங்குவதாக வாக்களித்தான். சீர்திருத்தங்கள் காலந்தாழ்ந்தே கிடைத்தது. திருப்திகரமானதாகவும் அவை இருக்கவில்லை. மக்களின் அதிருப்தி தொடர்ந்தது.

இந்த நிலையிலேயே முதலாம் உலகப்போர் தொடங்கியது. ஜேர்மனிக்கு எதிராகச் செய்த இந்தயுத்தத்தில் ரூஷியா தோல்வியே கண்டது. தொடர்ந்து ஏற்பட்ட பஞ்சத்துக்குப் பத்துலட்சம்பேர் பலியாயினர். 1917-ல் போர் நிறுத்தங்கோரி புரட்சிகள் தோன்றின. வேலைநிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் அதிகரித்தன. இராணுவமும் கிளர்ச்சிசெய்தது. ரூஷிய பாராளுமன்றமான 'டூமா' (Duma) அரசனின் ஆணையை மறுத்து அவனை முடிதுறக்கச் செய்தது. தற்காலிகஅரசாங்கத்தைக்கொரன்ஸ்கியின் (Kerensky) தலைமையில் அமைத்தது. 1918-ல் போல்சுவிக் புரட்சிக் குழுக்களால் வழிநடாத்தப்பட்ட தொழிலாளரும் போர்வீரர்களும் அரசாங்க அலுவலகங்களைக் கைப்பற்றியதுமன்றி, அதிகாரிகளையும் கைதுசெய்தனர். தற்காலிக அரசாங்கத்தையும்கவித்து போல்சுவிக்ழ் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. முழு அதிகாரமும் போல்சுவிக் கட்சியைச் சென்றடைந்தது. தமக்கு எதிரான ஆயிரக்கணக்கானோரை இரக்கமின்றி ஒழித்தனர் லெனினும் அவனது சகாக்களும். மக்களுக்கு உணவும் சமத்துவமும் தருவதாக வாக்களித்தனர். ஆனால் விலைமதிக்கப்படாத மனிதசுதந்திரம் பறிக்கப்பட்டது. ஸ்ராலினின் ஐந்தாண்டுத்திட்டங்கள் ரூஷியாவை ஒரு முதலாந்தர வல்லரசாக்கினாலும் 'முழு மனிதனுக்கும்' அங்கே முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இரகசியப் பொலிசாரின் கழுகுக் கண்களுக்கு அகப்படும் புரட்சியின் எதிரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். தொழிற்சாலைகள், வங்கிகள், நிலங்கள் முதலான சகலமும் தேசியமயமாக்கப்பட்டன. கிரேக்க வைதீகத் திருச்சபையின் நிலங்கள், சொத்துக்கள் பறிக்கப்பட்டன.

இவ்வாறு வெற்றிபெற்ற கொமியூனிஸம் மனிதனுக்கு உண்மையான சுதந்திரம் அளித்ததா? இல்லை. உண்மையான சுதந்திரம் லௌகிக நன்மையில் மாத்திரம் இல்லை. மனிதனின் உண்மையான கதியை அடைந்துகொள்ளப் பொருளாதார சுபீட்சமும், விஞ்ஞானமும், கலாசாரமும் மாத்திரம் இருந்தால் போதாது. உண்மையான சுதந்திரம் கடவுளிடமிருந்துதான் வரவேண்டும். அவர்தான் எல்லாத் துன்பங்களுக்கும் காரணமான பாவத்திலிருந்து மனிதனை மீட்க வல்லவர். மனித வாழ்வில் கடவுளுக்கு என்றும் ஓர்இடம் இருந்தே தீரவேண்டும்.

## ஜீவ ஊற்றாகிய...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாகப் புதிதான மனத்துடன் மறுரூபமாகவேண்டும்." இவ்வித புது மாற்றத்தினால் வெகு இலகுவாக நம் நல்ல தேவனுக்குச் சேவை செய்துவிடலாம்என்று எண்ணமுடியாது. நம் மீட்பர் கிறீஸ்தவுக்கு எதிர்த்துநின்ற அத்தனை எதிர்ப்புகளும் பசாசின சோதனைகளும் அச்சத்துக்குரிய சிலுவைகளும் நம்மையும் தீண்டாமலவிடப்போவதில்லை.

அப்படியான அச்சந்தரும் எதிர்ப்புகளையும் வென்று நம் மீட்பருக்குச் சேவை செய்வதற்கு அவரே பரிசுத்த பவுல் அப்போஸ்தலர் வாயிலாகச் சில போராயுதங்களை நாம் அணிந்துகொள்ளும்படி ஏவுகிறார். அதாவது, தேவனுடைய சேவைக்கென்று அழைக்கப்பட்டவர்கள் தங்கள் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, அக்கிரம அரூபிகளோடுமே போராடிச் சேவை செய்ய வேண்டியிருக்கிறது. எப்படியெனில், அவர்கள் பிரமாணிக்கம் என்கிற இடைக்கச்சையையும், இருதய பரிசுத்ததனமாகிய மார்புக் கவசத்தையும் அணிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறதற்கு எங்கும் போவதற்கு வேண்டிய தைரியம்என்னும் பாதரட்சையைத் தரித்து, விசுவாசம் என்னும் கேடயத்தைப் பிடித்து நமக்கு எதிராகவரும் அக்கினியாஸ்திரங்களைத் தடுத்து இந்தப் பயங்கர யுத்தத்தில் நம்முடைய தலைவராகிய யேசுநாதர் தப்பாமல் வெற்றிதருவார் என்னும் முழு நம்பிக்கையாகிய தலைச்சீராவையும் அணிந்து நம் சத்துருக்களை வெட்டி ஜெயிக்கும்படி தேவ வாக்கியமாகிய பட்டயத்தையும் பாவிக்கும்படி கூறுகிறார். ஆகையால், நாமும் இப் போராயுதங்களை அணிந்து செபத்தோடும் தபத்தோடும் விழித்திருந்து நமக்காகவும் நமது சகோதரருக்காகவும் போராடி வெற்றிஈட்டுவோம்.



விற்பனைக்கு எங்களிடம்

2-ம் வகுப்புமுதல் G. C. E. வகுப்புவரை உபயோகிக்கத்தக்க

கணித வாய்பாடு

விற்பனைக்கிருக்கிறது.

பிரதிவிலை சதம் 20

| | |
|---|---|
| புதிய ஏற்பாடு | ...7-00 |
| திருக்குடும்ப பக்திமாலை | ...4-50 |
| கிறிஸ்துவில் வாழ்க்கை | ...2-50 |
| பாடுகளின் பாதையிலே | ...1-00 |
| மரித்த யேசு. சாசனம் | ... 75 |
| மரண தண்டனை | ... 30 |
| அரசன்விரும்பிய சேவை... | 75 |

கிடைக்குமிடம்:

புனித சூசைமாமுனிவர் புத்தகசாலை,
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருஷியப் புரட்சி

## ஒரு சுருக்கமான வரலாற்றுக் கண்ணோட்டம்

எஸ். ஏ. ஐ. மெத்தியூ

கடந்தகால வரலாற்றின் பிரச்சனைகளையும் அவற்றைத் தக்கவாறுதீர்க்க முடியாததால் அல்லது தீர்க்க முயலாததால் ஏற்பட்ட விளைவுகளையும், அவ்விளைவுகளின் காரணமாக முளைந்த புதியபிரச்சனைகளையும் மனிதன் அலசி ஆராயாவிட்டால் எதிர்காலப் பிரச்சினைகளுக்குத் தக்க முடிவு காண முடியாது. நாம் கடந்தகால வரலாற்றை நுணுகி ஆராய்ந்து கற்றுக்கொள்ளும் பாடமே மனித சமுதாயத்தை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சனைகளைத் தக்கமுறையில் அணுக உதவிசெய்யும். அல்லாவிடில் மனிதசமுதாயம் அழிவுப்பாதையில் செல்வதைத் தடுக்கமுடியாது. வரலாற்று அறிஞர்களின் முடிவு இதுவாகும்.

உலக வரலாற்றிலே பல புரட்சிகள்ஏற்பட்டன. அவற்றின் விளைவுகள் அவை சம்பந்தப்பட்ட நாடுகளையும் ஏனைய நாடுகளையும் வெகுவாகப் பாதித்துள்ளன. 1770-ம் ஆண்டில் அமெரிக்கக் குடியேற்றங்கள் தாய்நாடாகிய பிரித்தானியாவுக்கு எதிராகப் புரட்சி செய்தன. அமெரிக்கர் பெற்ற வெற்றி பிரித்தானியாவின் சாம்ராச்சியக் கொள்கையை வெகுவாகப் பாதித்தது. 1789-ல் பிரான்சில் தோன்றிய புரட்சி வரலாற்றின் போக்கிலே பெரியதொரு மைல்கல்லாக அமைந்தது. ஐரோப்பாவின் பழைய அரசியல் முறைகளையெல்லாம் ஆட்டங்காணச் செய்தது பிரான்சியப் புரட்சி. அடுத்து கைத்தொழிற் புரட்சி பெரிய சமுதாய விளைவுகளைக் கொண்டுவந்தது. பழைய ஐரோப்பாவின் சமுதாயநிலையின் கூறுகளாகிய மானியம்பிரபு, விவசாயிஎன்ற நிலையை மாற்றி, முதலாளி,தொழிலாளி என்ற புதிய வர்க்கங்களைத் தோற்றுவித்தது. இன்னும் பலவிளைவுகளையும் கைத்தொழிற்புரட்சி கொண்டுவந்தது. கைத்தொழிற் புரட்சியின் காரணமாக மேற்கு நாடுகளின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது.

மூலப்பொருள் வளங்களைக் கொண்டிருந்த கிழக்கத்திய நாடுகளைக் கைத்தொழில் வல்லரசுகள் தம்மாதிக்கத்தின்கீழ் கொணர்ந்து அவற்றைச் சுரண்டலாயின. கிழக்கில் மக்களின் வாழ்க்கைத்தரம் மேற்கத்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தோடு ஒப்பிடும்போது மிகவும் கேவலமாகஇருந்தது. வானொலி, சினிமா, பத்திரிகைகள் வாயிலாக மேற்கத்திய மக்களின் வாழ்க்கை முறையை உணர்ந்த கிழக்கில் வறுமையில் வாழ்ந்த பெரும்பாலான மக்கள் அத்தகைய வாழ்க்கையைத் தாமும் அவாவினர். கைத்தொழிற் புரட்சியின் காரணமாக மேற்கத்திய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது எனினும் ஆரம்ப காலங்களில் இங்கிலாந்து போன்ற நாடுகளில் தொழிலாளர்களின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. பொருள் உற்பத்திசெய்யும் இயந்திரமாகவே தொழிலாளி பாவிக்கப்பட்டான். இதனைக் கண்ட கார்ல்மார்க்ஸ், எங்கல்ஸ்போன்ற தத்துவஞானிகள் மனங்குமுறினர். தொழிலாளி சுரண்டப்படுவதை அவர்களால் சகிக்கமுடியவில்லை. தத்துவ ஞானியும், பொருளாதார அறிஞருமான கார்ல்மார்க்ஸ் தனதுபிரசித்திபெற்ற 'டாஸ் கெப்பிடல்', 'கொமியூனிஸ்ட் மெனிவெஸ்டே' ஆகிய நூல்களை வெளியிட்டார். மாக்ஸிய சித்தாந்தம் ஆரம்பமாகிவிட்டது. ருஷியாவில் லெனின், ட்ரொட்ஸ்கி, ஸ்டாலின் போன்றோரிடம் இக்கருத்து செல்வாக்குப் பெற்றது. லெனின் மார்க்ஸின் சிந்தனைகளின் அடிப்படையிலான போல்சுவிக் கட்சியை உருவாக்கினர். இக்கட்சியே ருஷியாவில் 1917ஆம் ஆண்டு புரட்சியை முன்னின்று நடத்தியது. 1918-ல் போல்சுவிக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

1917-ல் ருஷியாவை வெற்றிகொண்ட கொம்யூனிஸம் ருஷிய எல்லைக்குள் மட்டும் கட்டுப்பட்டு நிற்கவில்லை. கொம்யூனிஸமும், ருஷிய ஆதிக்கமும் விரைவில் மேற்கிலும் கிழக்கிலும் பரவியது. வெள்ளத்திற்கு அணைபோடலாம். இராணுவத்தின் போக்கைத் தடுத்து நிறுத்தலாம். ஆனால் எண்ணங்களுக்குத் தடைகள் போடமுடியுமா? அணைகள் கட்டத்தான் முடியுமா? கொம்யூனிஸம் ஒரு சித்தாந்தம். அதனால் அதன் ஊடுருவலைத் தடுக்கமுடியாது போய்விட்டது. கொம்யூனிஸம் உலகம் முழுவதையும் தன் ஆட்சியுள்கொண்டுவரும் கொள்கையைக் கொண்டது. உலகை வெற்றிகொள்வதற்கு முன் ஆசியாவை அடிப்படுத்த வேண்டும் என்பது மொஸ்கோ தலைவர்களின் குறிக்கோளாகும். ஆசியாவில் கொம்யூனிஸம்பரவ நிலம் நல்லவாய்ப்பாக உள்ளதுபோலும். எங்கு வறுமை தாண்டவமாடுகிறதோ அங்கு கொம்யூனிஸம் காலூன்றும்.

இதனாற்றான் 1949-ல் சீனா செஞ்சீனாவாக மாறியது. செம்படையினருக்கு சியாங்கைசேக் அடிபணிந்தார். சீனாவில் கொம்யூனிஸத்தைப் பரப்பிய முக்கிய தலைவர்கள் மாகோட்ஸ் – துங், சூ—டே, சூ—என்-லாய் என்பவர்களாகும். மேலும் கிழக்கில் வடமொங்கொரியா ஜப்பானியரின் பிரதேசங்களாக இருந்தன. வடகொரியா, திபேத், வடவியற்னும் ஆகிய பிரதேசங்களில் கொம்யூனிஸஆட்சி நிலவுகிறது. இவ்வாறே மேற்கில் ருமேனியா, வடகிழக்குப் பிரஷ்யா,செக்கோசிலோவாக்கியா, போலாந்து, அல்பேனியா, பல்கேரியா, கிழக்கு ஜேர்மனி, ஹங்கேரி முதலான நாடுகளில் கொம்யூனிஸமும் ருஷிய செல்வாக்கும் நிலவுகிறது. 1917-ல் ஏற்பட்ட ருஷிய புரட்சி இவ்வளவு பெரிய விளைவுகளைக் குறுகிய காலத்துக்குள் கொண்டுவரக் காரணம் என்ன? ருஷியாவில் புரட்சி வெற்றிபெறக் காரணம் யாது? என்பவைகளை ஆராயுமுன் கொம்யூனிஸம் அல்லது மாக்ஸிய சித்தாந்தம்என்றால் என்னஎனச் சுருக்கமாக ஆராய்தல் அவசியம்.

தெய்வீகத்தை முற்றாக ஒதுக்கித்தள்ளிசடப்பொருள்களில் முழுநம்பிக்கை வைக்கும் மாக்ஸிஸம் மக்களுக்கு ஒரு பூரணமான வாழ்க்கைத் தத்துவத்தை அளிக்கிறது. மாக்ஸிஸம் மனிதனுக்கு ஒரு புது உலகத்தை வாக்களிக்கிறது. எதிர்காலத்தில் வரவிருக்கும் இப்புது உலகத்தில் ஏழை, பணக்காரன், முதலாளி பாட்டாளி என்றபாகுபாடு இருக்காது. அந்தக் கனவுச் சமுதாயம் ஒரு வகுப்புக்களற்ற சமுதாயம். அதிலே யாவரும் மற்றவர்களின் நலன் கருதிதோழமைஉணர்வோடு, தியாக சிந்தையோடு உழைப்பர். இச்சமுதாயத்தில் கல்வி கலாச்சாரம், வாழ்க்கை வசதிகள்யாவும் எல்லோருக்கும் சமமாக அளிக்கப்படும். இந்தச் சமுதாயத்தில் தொழிற் சுரண்டல் இருக்காது. சகலரின் துயர்களும் களையப்படும்.

கொம்யூனிஸம் ஓர் உலக இயக்கமாகும். எல்லா நாட்டிலும் அல்லற்பட்டுவாழும் மக்களை விடுவிக்க விழைகிறது கொம்யூனிஸம். கிறிஸ்தவ வார்த்தையில் கூறவேண்டுமாயின் கிறிஸ்தவன் ஒருவன் எவ்வாறு கிறிஸ்துவைப் பரப்புவதை ஓர் அப்போஸ்தலிக்க சேவையாகக் கொள்ளவேண்டுமோ அவ்வாறே கொம்யூனிஸத்தைப் பரப்புவது தனது அப்போஸ்தலிக்க கடமை என ஒவ்வொரு கொம்யூனிஸ அங்கத்தவனுக்கும் போதிக்கப் படுகிறது.

கொம்யூனிஸம் சமயத்தின் எதிரி. இதனால் கிறிஸ்தவத்தை வன்மையாக எதிர்க்கிறது. ஆனால் கொம்யூனிஸத்திற்கு ஒரு புதுக்கடவுள் உண்டு. இக்கடவுள்தான் மனித சமுதாயம். கடவுள் நம்பிக்கை உடையவர்களுக்குக் கடவுளில் விசுவாசம் உண்டு. கொம்யூனிஸம் எதிர்காலத்தில் வரவிருக்கும் வகுப்புக்களற்ற சமுதாயத்தில் பூரண விசவாசம் கொண்டுள்ளது. இந்தக் கற்பனை உலகத்தைச் சிருஷ்டிக்க ஒவ்வொருவனும் தன் சொந்தநலனைத் தியாகஞ் செய்யத் தயாராயிருக்க வேண்டும்.

இந்தக் கொள்கைகளைக் கொண்ட போல்சுவிக் கட்சிதான் 1917-ல் ருஷியாவில் புரட்சியை முன்னின்று நடத்தியது. பழைய அரசுமுறையை ஒழித்துப் புதிய சர்வாதிகாரத்தை உருவாக்கியது. 1917-ல் ருஷியாவில் இப்புரட்சி வெற்றிபெறக் காரணம் என்ன?

மானிய முறை அடிப்படையில் நிலவிய ருஷியச் சமுதாயத்தில் பல குறைபாடுகள் காணப்பட்டன. நிலப் பிரபுவின் கீழ் குடிமைகள் இருந்தனர். இக்குடிமைகள் ருஷியச் சனத்தொகையில் பெருந்தொகையினராவர். இவர்களின்நிலை அடிமைகளை விடக் கேவலமாகவும், அநீதியாகவும் இருந்ததுஎனச் சுருக்கமாகக் கூறலாம். இந்தக்கொடுமைகள் களையப்பட வேண்டுமென்பதை ருஷிய சார் 2-ம் அலெக்சாண்டர் உணர்ந்தான் 1861-ம் ஆண்டு குடிமைகள் விடுதலைச் சட்டத்தைக் கொணர்ந்தான். இதன்படி விவசாயிகள் பயிரிட்டு வந்த நிலத்திற்கு அவர்கள் சொந்தக்காரர்களாயினர், ஆனால் இச்சட்டம் பலகுறைபாடுகளைக் கொண்டதாக இருந்தது. நிலங்களைப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டியது பிரபுவின் பொறுப்பில் விடப்பட்டது. இதனால் பிரபு தனக்குச் செழிப்பான நிலப்பரப்புகளை வைத்துக்கொண்டு, செழிப்புக் குறைந்த பிரதேசங்களை விவசாயிகளுக்குக் கொடுத்தான். இந்த நிலத்திற்கு விவசாயி பெருந்தொகைப்பணம் நட்டஈடாகக் கொடுக்கவேண்டியிருந்தது. அந்த நஷ்டஈட்டைக் கொடுக்க விவசாயியிடம் பணம் இருக்கவில்லை. இதனால் இப்பணத்தை 'மிர்' (MIR) என்னும் கிராமச்சபைகள் விவசாயியின் சார்பில் கட்டின. இப்பொழுது விவசாயி 'மிர்'ருக்குக் கடன்கொடுக்கக் கடமைப் பட்டிருந்தான். அவனால் இந்தக் கடனைக் கொடுக்க முடியவில்லை. கடனின் மேலான வட்டியே பெருந்தொகையாகப் பெருகியது. ருஷிய நிலப்பங்கீட்டு முறை காரணமாக விவசாயியின் துண்டுநிலம் மேலும் மேலும் பிரிக்கப்பட்டுப் பரிரிடுவதற்கே போதாததாய் இருந்தது. இடையிடை ஏற்பட்ட பயிர்நாசங்களும் விவசாயியைப் பஞ்சநிலையில் வாட்டின. இவர்களின் நிலை எவ்வளவு மோசமாக இருந்தது என்பதற்குச் சிலமாகாணங்களில் தம்வருவாயில்90வீதம் வரியாகச் செலுத்தினர் என்பதிலிருந்து அறியலாம். ருஷியாவில் போதியளவு தானியம் இருந்தது. ஆனால் அவற்றை வாங்கவிவசாயிகளிடம்பணம் இருக்கவில்லை. இந்த நிலையில் மிர்ரை விட்டுவிட்டுப் பட்டினங்களுக்குச் சென்று தொழிற்சாலைகளில் வேலைதேடலாம் என்றாலும் கடன்பணத்தைக் கொடுக்கும் வரையும் நிலத்தைவிட்டு போகமுடியாதென மிர் தடுத்தது. தன்பங்குப் பணத்தைக் கொடுக்கக் கூடிய வேறு ஒருவனுக்குத் தன்நிலத்தை விற்றாலே விவசாயி நிலத்தைவிட்டு நீங்கலாம், ஆனால் நிலத்தை விற்பது அதைவிடக் கஷ்டமாக இருந்தது. இந்தநிலையில்நிலத்தின் மதிப்பைப் பெறாமலே அப்படியே விட்டுவிட்டு நகரப்புறம் நோக்கிச் சென்றோர் அநேகர்.

கிராமப்புறநிலை — இவ்வாறாகப் பட்டினங்களில் நல்வாழ்வு பெறலாம்என்றுவந்த சனங்கள்நிலை அதைவிடக்கேவலமாக இருந்தது எனல் வேண்டும். கைத்தொழிற் புரட்சியின் காரணமாக 1870 இன் பின்னர் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் தொகை பெருகியது. 1870-ல் 700,000 தொழிலாளர். 1880-ல் 14, 33,000 தொழிலாளிகள். 1912-ல் 4,500,000 தொழிலாளிகள். இவ்வாறு பட்டினங்களில் தொழிலாளர் தொகை பெருகியபோது தொழிலாளர்கள் வீடு வசதிகள்இன்றி கஷ்டப்பட்டனர். தொழிலாளர்களைப் பாதுகாக்க எந்தவிதமான சமதர்மச் சட்டங்களும் இருக்கவில்லை. தொழிற்சாலைச் சட்டங்கள் உருப்படியாக ஒன்றும் இருக்கவில்லை. 1890-ம்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## அன்பர் அரங்கு...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தனித்தோ கழகங்களாகவோ செயல்படவேண்டும் — என்றார். அரங்கத்தில் கலந்துகொண்ட அனைவரும் இதுபற்றித் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். சொல்லளவில் நில்லாது செயலில் இறங்கவேண்டும் என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்புலி மாமாவின் அரவணைப்பிலே!....

விடிஞ்சது விடியாமுன்னமே அப்பல்லோ... அப்பல்லோ... என்று அங்கலாய்க்கத் தொடங்கிவிட்டாள் மகளிர் மன்ற ஆசிரியை. "இங்கே டெலிவிஷனுமில்லை... ஒரு மண்ணாங்கட்டியுமில்லை. நீயாவது கேப்கென்னடி பக்கம்போய் நல்லதா நாலு நியூஸ் கொண்டு வாவேன்!... என்று விரட்டினாள், ஒரே விரட்டு. முணுமுணுத்துக்கொண்டே "விர்"ரென்று கிளம்பினேன். கீச்!... கீச்!...

இடையே சிறகுகள் வலியெடுத்தன. நம்ம பாப்பு தந்தையையும் ஒருக்கால் பார்த்துவிட்டுப் போவோமே என்று போய்க் குதிச்சேன் வத்திக்கானில். "வீவா இல் பாப்பா!"... என்று கத்தினேன். வா!... வா!...லங்கா பியூட்டி என்றார் சின்னப்ப தந்தை. பாப்பாண்டவர் முகத்தில் உற்சாகம் குறைந்துதான் காணப்பட்டது. "கவலைப்படாதீங்க... அகில உலகத்தோலிக்க திருச்சபையைக் கட்டி ஆளுவதென்டால் சும்மா லேசுப்பட்ட காரியமா?... இது போராடும் திருச்சபை அல்லவா?... மலைபோலத் துன்பம் வந்தாலும் தூய ஆவியானவர் அவற்றையெல்லாம் சுமுகமாகவே தீர்க்க வரம் தருவார்" என்று ஆறுதல் கூறினேன். பாப்பரசர் ரொம்பச் சந்தோஷப்பட்டார். "ஆமா!... நீங்க ஆபிரிக்காவுக்குப் போகிறதாகக் கேள்விப்பட்டேனே. அப்படியே நம்ம இலங்கைக்கும் ஒருக்கா வந்து போங்களேன்" என்றேனா!... "ஆகட்டும் பார்க்கலாம்" என்றார். அவர் அன்போடு அளித்த "அன்னாசிரசம்"லை ஒருகை பார்த்துவிட்டு நேரே வேல்ஸ் நகரிலுள்ள "கார்நர்வோன்" மாளிகையில் போய்க் குதிச்சேன். கீச்!... கீச்!...

"விஸஸ் யுவர் மஜெஸ்ரி!"... என்று வேல்ஸ் இளவரசர் சார்லஸின் கைகளைப் பிடித்துக் குலுக்கி வாழ்த்தினேன். "வா!... வா!... பியூட்டி நீ ஏன் என்னுடைய பட்டமளிப்பு விழாவுக்கு வரலை" என்று குறைபட்டார் இளவரசர். நீங்க நல்ல ஆளுங்க. போங்க!... எனக்கு இன்விடைஷன் கின்விடேஷன்று ஏதாவது அனுப்பியிருந்தீர்களா" என்று விளாசினேன். பயந்து போனார் சார்லஸ். "இங்கே பார் பியூட்டி. இங்கே எல்லாம ஒரே தடபுடல். இதுக்கிடையில் ஆர்பாட்டங்கள் குண்டுவீச்சுக்கள் வேறு. இந்தச் சந்தடியில் உனக்கு அழைப்பு அனுப்பவில்லை. மன்னிச்சுக்கொள்" என்றான். நல்லது தம்பி!... பரவாயில்லையே!... என்றாலும் ரொம்ப ஜாக்கிரதையாயிருங்க. ஏனென்டால் இந்த வேல்ஸ் இளவரசர்களின் ஜாதகங்கள் ஒண்ணும் அவ்வளவு நல்லாய்க் காணலெ. விக்டோரியா ராணியின் மகனை வேல்ஸ் இளவரசராக்கினார்களோ, இல்லையோ!... அந்த மனுஷன் 60 வருஷம் காத்திருந்தார் ராசாவாகிறதுக்கு. அரசனாகிய பின்தான் ஆறுதலாயிருந்தாரா?... ஒன்பதே ஒன்பது வருடம்தான் ஆட்சி!... அப்புறம் 1911இல் எட்வேட்டை இளவரசராக்கினார்கள். அவரோ காதலித்த பெண்ணுக்காக சிம்மாசனத்தையே விட்டிட்டுப் போயிட்டாரே!... உங்கபாடும் என்னவோ?... நீங்களும் அரசராக வர அதிக காலம் காத்திருப்பீங்க போலும்!... என்றேனா.

"சே! சே!... எங்கம்மா என்ன சொல்லியிருக்கிறாங்க தெரியுமா?... நல்லபடியா எனக்குக் கலியாணம் நடந்து, அனுபவ அறிவும் கிடைச்சிட்டா என்னை ராஜா ஆக்கிவிட்டுத் தாங்க ராஜினாமா செய்துடுவாவாம்" என்றான் சார்லஸ். "அப்படியா!... ரொம்ப நல்லதாச்சே!... சரி, போய் வரட்டுமா!... என்று "செரியோ" கூறிவிட்டு நேரே பறந்தேன் அப்பல்லோ பதினொன்றை நோக்கி. இலங்கை நேரம். ஞாயிறு இரவு ஒன்றரை மணி. அப்பல்லோ வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. நானும் வேகமாகப் பறந்து போய், "ஈகிள் என்ற சிலந்திக் கூட்டின் ஒரு காலில் தாவி ஏறிக்கொண்டேன். சிலந்திக் கூண்டுக்குள் இருந்த ஆல்டிரின் என்னைக் கண்டு பயந்து போயிட்டானா. உடனடியாகச் சிக்னல்கள் அமெரிக்காவிலுள்ள கவுஸ்டனுக்குப் பறந்தன.

"அதுருஷியாவின் லூனா அல்ல... லங்கா பியூட்டி... விஸ்பண்ண வந்திருக்குப் போலிருக்கு" என்று பதில் வந்தது கவுஷ்டனிலிருந்து. தாவினேன் உள்ளே. "தொடங்கிய சந்திர விஜயம் சக்ஸஸ் ஆகட்டுமப்பா" என்று ஆம்ஸ்ரோங்கையும், ஆல்டிரினையும் 'விஸ்' பண்ணினேன். "நல்ல நேரம் வந்தாய் பியூட்டி!... நான் இப்போது ஒரு ரொக்கட்டை வெடிக்கப் போகிறேன். கொலம்பியாவிலிருந்து ஈகிள் பிரிந்து அம்புலியை நோக்கிப் போகும். நீயும் எங்களுடனே வாவேன்! என்றார் ஆம்ஸ்ரோங்.

"போய்யா! நீங்க இரண்டு பேரும் போறீங்களே!... போயிட்டு வாங்கைய்யா!... அந்த மனுஷன் கொலின்ஸ் கொலம்பியாவில் தனியே இருக்கப் போறாரே. அவரை ஆறுதல் பண்ணிட்டு அப்புறமா வாறேன்!... அதுமட்டுமில்லை; உங்களுடனே வந்தேனா அப்புறம "குவாறன்ரைன்" என்று சொல்லி என்னையும் 21 நாள் கண்ணாடி அறைக்குள்ளே பிடிச்சு வைச்சிடுவாங்க பாரு. எனக்கு அப்படி அடைஞ்சு கிடக்கவெல்லாம் பிடிக்காது. சரி சேமமே போய் நல்லபடியா வாருங்க" என்றேனா. 'குட்பை' சொல்லிக்கொண்டார்கள். குழாயினூடாக நுழைஞ்சேன் தாய்க் கப்பலுக்கு.

"பியூட்டி!... சந்திரனிலிருந்து 60மைல் வரை வந்திட்டு அதிலை இறங்காம போறதை நினைச்சா ரொம்ப வருத்தமா இருக்கு. என்னுடைய கடமையை நான் செய்யணும். ஆனாலும், மனசு கேட்குதா" என்று அலுத்துக் கொண்டார் கொலின்ஸ். கவலைப்படாதீங்க. உலகத்திலை எல்லாருமே புகழும் தாஜ்மகால் இருக்கிறதே, அதைக் கட்டியெழுப்ப எத்தனையோ கூலியாட்கள் இராப்பகலாய்ப் பாடுபட்டார்களாம். ஆனாலும், பெருமை எல்லாம் சாஷா ஜாஸ் மன்னனுக்குத்தானே கிடைச்சது. அப்படித்தான் இந்த மூன் யோர்னியிலே உங்களுடைய பங்கு உன்னதமானது. உலகமெல்லாம் அது பற்றித் தெரியும். நீங்க சந்திரனைச் சுத்திக்கிட்டே இருங்க. நான் கவுஷ்டனுக்குப் போயி தெலிவிஷன்லே உங்களையெல்லாம் பார்த்திண்டே இருக்கேனே!... என்று கூறிவிட்டுப் பாய்ந்தேன் வெளியே.

கவுஸ்டனிலே இறங்கினேன். லங்கா பியூட்டியா வா!... வா!... என்றழைத்தார் ஒரு விஞ்ஞானி. காங்கிராஸுலேஸன்ஸ்! அகில உலகமே உங்க சாதனையிலே பிரமிச்சிட்டுப் போயிருக்காங்க, என்று சொல்லிக் கொண்டே தெலிவிஷன் பக்கம் திரும்பினேன். சரியாக இலங்கை நேரப்படி இரவு 1-49க்கு ஈகிள் சந்திரனிலே இறங்கியது. கொஞ்ச நேர ஓய்வுக்குள்ளே சந்திரனிலே இறங்கிடணும்னு ஆல்டிரினும், ஆம்ஸ்ரோங்கும் துடியாய்த் துடிச்சான்கள். அவங்களோடை ஆவலைத் தெரிஞ்சுக்கிட்டு அதுக்கென்ன!... இறங்கச் சொல்லுங்களேன்!... என்று நானும் அவங்க பக்கமாய்ப் பாடினேன். உத்தரவு கொடுத்தாங்க பூமியிலேயிருந்தவங்க. சந்திர டிரஸ்ஸைப் போட்டுக்க மட்டும் எவ்வளவு நேரம் பிடிச்சுதப்பா!... அப்புறம் கூட கதவடிக்கு வந்தால் கதவே திறபடுகிறதாய்க் காணோம். இழுத்துப் பறிச்சு இறைவா! நம்மைக் காப்பாத்து என்று வேண்டிக்கொண்டே கடைசியாய்ச் சந்திரனிலே காலை வைச்சாங்க ஆம்ஸ்ரோங். ஆரவாரித்தாங்க அமெரிக்கரெல்லாம். ஏன்! நானும் கூடத்தான். பலே ஜோர்!... வெல்டவுண்!... கீச்!... கீச்!... என்றேன். மறந்திடாமே எங்க இலங்கைக் கொடியையும் கொண்டு போய் அந்த அம்புலியிலே வைச்சாங்களே! அதுக்கு அவங்களைப் பாராட்டிக்கிட்டு "விர்"ரென்று பறந்தேன் நம்ம மாங்கனித்தீவை நோக்கி. கீச்!... கீச்!...

உண்மையிலே அம்புலியைக் காதகோடி மைல்களுக்கப்பாலிருந்து கண்ணால் கண்டு களிக்கின்றோமே. நிலாச்சாப்பாடு என்றும், நிலா உலா என்றும், நிலா தூக்கம் என்றும், நிலா உல்லாசப் பயணம் என்றும் சொல்லிக் கொண்டு நம்ப மனுஷாள் எல்லாம் மனமகிழ்ந்த காலம் மலையேறி விட்டது. நிலவுத் தரையிலே நடந்து, அந்த நிலவுலகிலே உண்டு, உடுத்து, உறங்கி, அதன் காட்சியைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்த இந்த விண்வெளி வீரர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியுமா?... அம்புலியைப் போல அநேக கோள்களைப் படைத்து, அவற்றை அந்தர விண்வெளியில் ஆட்டிவரும் இறைவனை நாம் கையெடுத்துக் கும்பிடாமல் இருக்க முடியுமா? கீச்!... கீச்!... வரட்டுமா!...



## மகளிர் மன்றம்

அன்புநிறை நேயர்களே! வணக்கம்!........

அம்புலி தரையினில் இறங்கிடவே
ஆர்வம் கொண்டார் அமெரிக்கர்
விஞ்சிடும் சாதனை மிகச்செய்தே
வைத்தான் காலடி வியக்கின்றீர்!
விண்ணெனும் மாளிகை விட்டிறங்கி
விளங்கிடு மன்பதை மீட்பதற்கே
மண்ணில் காலடி வைத்தபரன்
மலரடி தொழஏன் மறக்கின்றீர்?

நிலவின் அற்புதங் காண்பதற்காய்
நீண்டநாள் ஒடுங்கினர் விண்வீரர்
சிலந்திக் கூண்டின் வாகனத்தில்
சிந்தனை செய்தே வியக்கின்றீர்!
"மாநில மக்களின் நடுவினிலே
வாழ்வதே எனக்கு இனிமை" யென்றே
நாதன் நல்யேசு ஒடுங்கிவாழும்
ஆலயம் செல்லஏன் மறக்கின்றீர்?

அம்புலி! அம்புலி! வாவென்றே
அன்று பாடிய மழலைகளும்
"அம்புலிக்கே போய் வருவோமா?"
என்பதைக் கேட்டே வியக்கின்றீர்!
"அப்பா பிதாவே" என்றுகூறி
அழகுக் கைகூப்பும் மழலைகட்கு
இறைவன் ஒருவர் இருக்குமுண்மை
இன்று கூறஏன் மறக்கின்றீர்?

அம்புலி சென்ற விண்வீரர்
அங்கேயுள்ள மண், கல்லை
அள்ளி வந்த சாதனையின்
ஆற்றல் கண்டே வியக்கின்றீர்!
புண்ணியக் கிரிகைகள் பலசெய்தே
புனிதன் இறைக்கும் அருள்மழையை
அள்ளி இதயந்தனில் நிரப்ப
அக்கறை யெடுக்கஏன் மறக்கின்றீர்?

அம்புலி தன்னை ஆட்கொள்ள
அகிலமும் காட்டும் ஆர்வமதில்
எம்பிடுந் தீவிரம் அப்பப்பா!
எத்துணை! எத்துணை! வியக்கின்றீர்!
விண்ணுல காசனம் அடைந்தங்கே
விண்ணவன அன்பில் துய்த்திடவும்
என்றுமே மகிழ்ந்தே வாழ்ந்திடவும்
எண்ணங் கொள்ளஏன் மறக்கின்றீர்?

— ரோஜா

# யார் அந்த மனிதன்?

அவளுடைய கணவன் வேலை செய்து கொண்டிருக்கும்போது இருதயநோயினால் தாக்கப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக அவள் அறிந்தாள். ஒருகணம் அவள் திகிலடைந்தாள். மறுகணம் தன்னை அவள் தேற்றிக்கொண்டு வைத்திய மனையை நோக்கிப் புறப்பட்டாள்.

வீதியில் அவள் துக்கத்தினால் பலவீனமாக நின்றாள். அவளுக்கு அருகில்நின்ற ஒரு மனிதன் "உமக்குச் சுகமில்லையா" என்று கேட்டார். அவள் தன் பரிதாப நிலையை அவருக்குச் சொன்னாள். உடனே அந்த மனிதன் தான் ஒரு டாக்ஸியை வரச் சொல்லியிருப்பதாக அவளுக்கு தெரிவித்து தன்னுடன் வரும்படியும் கூறினார்.

டாக்ஸி வந்துநின்றது. தான் போகவேண்டிய இடத்தை டாக்ஸி சாரதிக்குச் சொன்னார் அந்த மனிதன், குறிப்பிட்ட இடத்தை டாக்ஸி அடைந்தது. அந்தப் பெண் போகவேண்டிய இடத்தைத் தெரிவித்தார். அந்த மனிதன் டாக்ஸியில் இருந்து இறங்கும்பொழுது "நல்ல அதிர்ஷ்டம்; எல்லாம் நல்லவையாக உமக்கு அமையட்டும்" என்றார்.

குறிப்பிட்ட இடத்தில் உள்ள டாக்ஸி வந்துநின்றது. "வாடகை எவ்வளவு" என்று கேட்டாள் அந்தப்பெண். அவன் அதற்கு, "உமது நண்பர் உமது வாடகையையும் என்னிடம் தந்தார்" என்றான். அவள் அதற்கு, "அந்த மனிதனை எனக்குத் தெரியாது. அவர் எவ்வளவு இரக்கமுள்ளவராக இருக்கிறார். அவர் ஒரு நல்ல சமாரித்தன்தான், இப்படி எத்தனைபேர் உலகில் இருக்கிறார்கள். மிகச்சிலரே. அந்த மனிதனைக் கடவுள் ஆசீர்வதிப்பாராக" என்று அவள் தன்னுக்குள்ளே சொல்லிக்கொண்டாள்.

— ரி. ஆர். மனோகரன்

(ஆதாரம்: கதலிக்ஸ் டையஸ்ட்)
மாசி இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலமுறை திருடப்பட்ட திருவோவியம்

— சாமுவேல் பெனடிக்ற் —

கென்ற் நகரத்தில் நன்கு மதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர் யோசவ் விடிற். நல்ல கத்தோலிக்கரான யோசவ் திவ்விய நற்கருணையின்மேல் மட்டற்ற பக்தி கொண்டிருந்தார்.

கென்ற் நகரில் அக்காலத்தில் ஓவியக்கலை செழித்தோங்கியது. உலகப்பிரசித்திபெற்ற ஓவியங்களை வரையவேண்டுமென்ற ஆவல் கொண்டவர்களாக அல்லும்பகலும் உழைத்தனர் இளம் ஓவியர்கள் பலர். அவர்களுள் முதன்மை படைத்தவர்கள் கியுபேட்டும் அவரது சகோதரரான வான் எய்க் என்பவருமேயாவர்.

1420-ம்ஆண்டு யோசவ் விடிற், சற்பிரசாதநாதருக்கு பெருமைதரும் வண்ணம் ஓர் அழகிய ஓவியத்தை தயாரிக்க எண்ணங்கொண்டார். கென்ற் நகரிலுள்ள பேராலயத்தில் அதைத் தொங்கவிடுவது அவர் எண்ணம்.

நண்பர்கள் கியுபெட் சகோதரர்களை சிபார்சுசெய்தனர். சித்திரச் சகோதரர்களை வரவழைத்துத் தம் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தினார் விடிற். ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. சில தினங்களின்பின் சகோதரர்கள் ஓவியத்தின் மாதிரி ஒன்றைக் கொணர்ந்து காட்டினர். "செம்மறிப்புருவைக்கு ஆராதனை" என்பது சித்திரத்தின் தலைப்பு ஆகும்.

சித்திரம் இரு பகுதிகளாக பிரிக்கப்படுகிறது. மேல்பகுதியில் ஐந்து மாடங்கள். இவற்றில் நடுவிடமாக அமைந்திருப்பது பெரியமாடம். அங்கு எமது விண்ணகத்தந்தை வீற்றிருக்கிறார். இருபக்க மாடங்களில் மாமரியாளும், ஸ்நாபக அருளப்பரும் காணப்படுகின்றனர்.

கீழ்ப்பகுதியில் நடுவிடமாக நீள்சதுர அமைப்பு. அங்கு மையத்தில் செம்மறிப்புருவை. சூழவர தேவதூதர்கள், அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், வேதசாட்சிகள், புனிதர்கள் அமைந்துள்ளனர். மற்றும்மாடங்களில் இசைமீட்கும் விண்ணவரும் புனிதர்களும் காணக்கிடக்கின்றனர். மேல்மாடங்களில் கரையோரமாக ஆதாமும் ஏவாளும் நிற்கின்றனர்.

இப்பிரபல ஓவியத்தை பேராலயத்துக்கு உபகரிப்போர் யோசவ் விடிற் அவர்களும் அவரின் துணைவியர் எலிசபேத் போர்லன்ற் அவர்களுமல்லவா? இவர்களது முகஉருவங்களும் ஒரு மூலையில் சித்திரிக்கப்பட்டன.

இந்தமாதிரிகை யோசவ் தம்பதிகளால் அங்கீகரிக்கப்பட்டது. 1421-ல் இப்பாரிய ஓவியத்தின் வேலை ஆரம்பிக்கப்பட்டது. மூத்தவர் கியுபேட் திட்டமிட்டு ரேகைமதிப்பீடுகளைச் சித்தரித்தார். இளையவர் வான்எய்க் அண்ணனின் ரேகையோவியங்கட்கு வண்ணச் சேர்க்கையால் உயிரூட்டினார். நிதானத்துடன் மிக நுணுக்கமாக திட்டமிடப்பட்டு சித்திரவேலை நடைபெற்றதால் 1426-ல் சித்திரத்தின் ஒரு சிறுபகுதிமட்டுமே பூர்த்தியாகியிருந்தது.

இந்நிலையில் கியுபேட் இறைவனடி சேர்ந்தார். தம்பி வான் எய்க் அண்ணனின் திட்டத்தை மிகச்சிறப்பாக நிறைவேற்றிமுடித்தார். அண்ணன் மேல் கொண்ட பாசத்தால் இப்பிரசித்தி பெற்ற ஓவியத்தில் தம்பங்கு எவ்வளவென்பதை இவர் கூறவேயில்லை. ஆயின் சுமார் 500 ஆண்டுகட்குப்பின்னால் ஓவிய விற்பன்னர்கள் நடாத்திய நுணுக்கமான பரிசோதனை சித்திரத்தின் பெரும்பகுதி தம்பியுடைய கைவண்ணம்தான் என்பதை எடுத்துக் காட்டியது.

1432. "செம்மறிப்புருவைக்கு ஆராதனை" என்ற திருவோவியம் கோலாகல வைபவங்களுடன் கென்ற் பேராலயத்தில் திரைநீக்கம் செய்யப்பட்டது. அத்தருணத்தில் அண்ணன் இல்லையே என்ற கவலையால் ஒரு தூணின்பின்னாக நின்று விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாராம் அருமைத்தம்பி வான் எய்க். பின்னர் தலைநகரமான பிறசல்ஸ் சென்று குடியேறிய வான் எய்க் 1440-ல காலமானார்.

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலத்துக்கு இத்திருவோவியம் எந்தவித துன்பமுமின்றி தினசரி பார்வையாளர்களால் தரிசிக்கப்பட்டுவந்தது. நெதர்லாந்து ஸ்பானியரின் ஆட்சிக்குள்ளாயது. இரண்டாவது பிலிப் மன்னன்கென்ற் ஆலயத்துக்கு வருகைதந்தபோது அவனது கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுத்தது "செம்மறிப்புருவைக்கு ஆராதனை."

தனது அரண்மனைக்கு சித்திரத்தைக் கொண்டுபோக வேண்டும் என்று தடியாய்த் துடித்தான் பிலிப்சக்கரவர்த்தி. பொதுமக்கள் மேற்றிராணியார் தலைமையில் எதிர்த்தனர். வாதப்பிரதிவாதங்களின் பின்னர் ஒருசமரசமுடிவு பிறந்தது. அக்கால ஓவியமன்னரான வான்குறெய்சிக் என்பவரைக்கொண்டு இச்சித்திரத்தைப்போல தயாரிக்கப்படும் உண்மைப் பிரதியைக்கொண்டு செல்ல மன்னன் சம்மதித்தான்.

நெதர்லாந்தின் சுதந்திரப் போராட்டங்களால் சிலவருடங்கட்குப்பின்னர் கென்ற் தேவாலயத்துக்கும் இன்னல்கள் நேர்ந்தன. ஸ்பானிய மன்னனை எதிர்த்தோர்புரோட்டஸ்தாந்துகள் ஆவர். அவர்களால் சித்திரத்துக்கு ஆபத்துண்டாகும் என்று அஞ்சப்பட்டது. சித்திரம் மறைவிடம் பெற்றது. 1587-ல் மீண்டும் போலயத்தில் இடமளிக்கப்பட்டது. 1641-ல் தேவாலயம் பெருந்தீயினால் அழிக்கப்பட்டபோது சில தியாகிகள் தீயுடன்போராடிச் சித்திரம் அழிவுறாது காப்பாற்றினர்.

சிறிது காலம் கழிந்தது. இரண்டாவது யோசவ் சக்கரவர்த்தி போலயத்துக்கு வருகைதந்தார். நல்லொழுக்கம் நிரம்பிய மன்னவர் இத்திருவோவியத்தில் ஆதாமும் ஏவாளும் ஆடையின்றி நிற்பதுகண்டு அதிர்ச்சியடைந்தார். அவ்விரு உருவங்களையும் சித்திரத்திலிருந்து பெயர்த்து. நல்லதொரு ஓவியனைக்கொண்டு, ஆபாசமின்றிக் காட்சியளிக்கும் வண்ணம் முதல்மனிதனையும் மனுஷியையும் சித்திரித்து அப்பகுதிகளில் பொருத்தச் செய்தார். பெயர்த்தெடுக்கப்பட்ட பகுதிகள் ஆலயச்சுரங்க அறையில் பாதுகாக்கப்பட்டன.

பிரான்சிய அரசியல் புரட்சியின் தாக்கம் நெதர்லாந்திலும் பரவியது. இத்திருவோவியம் புரட்சியாளர்களால் துண்டாடப்பட்டது. பிரதம பாகங்கள் பரீஸ் நகரத்துக்கு கொண்டு செல்லப்பட்டன. நெப்போலிய மன்னனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து வியன்னா மகாநாடு கூட்டப்பட்டதல்லவா? அப்பெரும் அரசியல் மகாநாட்டில் இச்சித்திரம்பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. சித்திரத்தின் பகுதிகள் எங்கிருந்தாலும் அவை கென்ற் தேவாலயத்துக்கு கையளிக்கப்படல் வேண்டும் எனச் சாசனம் வரையப்பட்டது.

எனினும் சித்திரத்தின் கரையோர மாடங்கள் கவனிப்பாரற்றுக் கிடந்தன. சில காலத்தின் பின்னர் அவை ஏலத்தில் விலைப்பட்டபோது ஜேர்மானியர் அதன் பெருமையை உணர்ந்தவர்களாக பதினாறுயிரம் பவுண்கள் கொடுத்து அச்சித்திரங்களைப் பெற்றனர். ஜேர்மானியிலுள்ள தொல்பொருட்சாலையொன்றில் இவற்றை பாதுகாத்தனர்.

பலவருடகாலம் தேவாலயச்சுரங்க அறைக்குள் கிடந்த ஆதாமும் ஏவாளும் ஓவியத்தின் அருமை தெரிந்தோரால் வெளிக்கொண்டு வரப்பட்டனர். பிறசல்ஸ்நகர நூதனசாலை ஆதாமுக்கும், ஏவாளுக்கும் புகலிடம் தந்தது.

முதலாவது உலக மகாயுத்தத்தைத் தொடர்ந்து வெர்சேயில்ஸ் பளிங்கு மாளிகையில் நடைபெற்ற சமாதான மகாநாடு ஜேர்மானியிலுள்ள பகுதிகள் மீண்டும் கென்ற் தேவாலயத்துக்குக் கொடுக்கப்படல்வேண்டுமென தீர்ப்பிட்டது. யுத்தத்தினால் ஜேர்மானியர்செய்த நட்டங்களின் ஒரு பகுதிக்கு ஈடாகவே இவ்வித தீர்ப்பு பிறந்தது.

கென்ற் நகரமக்கள் மகிழ்ச்சிகொண்டனர். நூதனசாலையிலிருந்த ஆதாமும், ஏவாளும் மீண்டும் கொண்டு வரப்பட்டனர். மீண்டும் கியுபேட் சகோதரர்களின் வேலைப்பாடு ஒன்றாகியது. ஆயின் இம்மகிழ்ச்சி 20 வருடங்கட்கே நீடித்தது.

இரண்டாவது உலகமகாயுத்த காலத்தில் ஜேர்மானியர் இவ்வோவியத்தை கவர்ந்துசெல்வதில் கருத்தாயிருந்தனர். எனவே, மகாயுத்தம் முடியும்வரை வெகு கவனத்துடன் திருவோவியம் பாதுகாக்கப்பட்டது. 1945-ல் மீண்டும் "செம்மறிப்புருவைக்கு ஆராதனை" கென்ற் பேராலயத்தில் எழுந்தேற்றம் பெற்றது.

1949-ல் ஒருநாள் காலை ஓவியத்தின் ஒரு பகுதி வெட்டியெடுக்கப்பட்டிருப்பதை நிர்வாகிகள் அவதானித்தனர். பெல்ஜிய தேசமே இச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தது. ஆலயநிர்வாகிகள் திறமை வாய்ந்த ஓர் ஓவியரின் உதவியுடன் அப்பகுதியை மீண்டும் சித்தரித்துப் பொருத்தினர். காணாமற்போன பகுதி கண்டுபிடிக்கப்படின் தனது சித்திரத்தை எடுத்துவிடலாமென அந்த ஓவியரே கூறினார். ஆயினும் இதுவரை அப்பகுதி பற்றி யாவுமறியப்படவில்லை.

சிலவருடங்களின் பின்னால் பத்திரிகைகளில் அநாமதேயக் கடிதம் ஒன்று காணப்பட்டது. களவாடப்பட்ட பகுதிக்காக பத்துலட்சம் பிராங்கு நாணயங்கள் தருவதாகவும் பணமுடையினால் தான் அச்சித்திரப்பகுதியைக் கையாடிவிற்க நேரிட்டதெனவும் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். பொலீசார் வெகுசிரமம் எடுத்துக்கொண்டு தேடியும் கள்வன் அகப்படவில்லை. சில மாதங்களின்பின்னால் பெல்சிய அரண்மனையில் விருந்துவைபவம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது ஒரு பிரமுகர் அறிவுமயங்கிவீழ்ந்தார். அவரை மருத்துவர்கள் பரிசோதித்துக்கொண்டிருந்தபோது சித்திரம்பற்றிய இரண்டொரு வார்த்தைகள் வெளிவந்தன. மருத்துவர்கள் சிரமம் எடுத்துக்கொண்டு அவரைக் காப்பாற்றவும் வார்த்தைகளைக் கிரகிக்கவும் முயன்று தோல்வி கண்டனர்.

இன்று பெல்ஜியத்துக்கு செல்பவர்கள் அனைவரும் தவறாது கென்ற் நகர் சென்று இத்திருவோவியத்தைப்பார்க்கத் தவறுவதில்லை. இச்சித்திரத்தின் நுணுக்கமான வேலைப்பாடுகட்கோர் உதாரணம்: அப்போஸ்தலர் வரிசையில் கையில் பைபிள் ஏந்தியவராக அருளப்பர் காட்சிதருகிறார். அச்சிறு பைபிள் நூலை பூதக்கண்ணாடியால் பார்க்குமிடத்து விரிக்கப்பட்டுள்ள பக்கத்திலுள்ள எழுத்துகளை தெளிவாக வாசிக்கக்கூடியதாகவுள்ளது. மெல்லிய தலைமயிரில் உதவிகொண்டே இவ்வெழுத்துகள் எழுதப்பட்டிருக்கலாமென ஓவியவிற்பன்னர்கள் கருதுகிறார்கள்.

## சந்திரன் படத்தை வரைந்த குருவானவர்

சந்திரனில் மனிதன் இறங்கத்துணிந்த நாள்முதல் பல நூற்றாண்டுகளுக்குமுதலே சந்திரனின் முகஉருவத்தை வரைந்த படங்கள் மீளவும் அச்சிடப்பட்டு வெளியாகிவருகின்றன. இப்படங்களுள்ஒன்று 300 வருடங்களுக்குமுன் வரையப்பட்டது. இதனைவரைந்தவர் டொமினிக் கசினோ என்னும் குருவானவர். இவர் யேசு சபையைச் சேர்ந்தவர். இவர் வரைந்த படத்துக்கும் சமீபகாலத்தில் வானவெளிவீரர் சந்திரனுக்குச் சமீபமாகச்சென்று எடுத்த படங்களுக்கும் வித்தியாசம் இல்லையென்று கூறப்படுகிறது. இக் குருவானவர் ஒரு வானசாஸ்திரி மாத்திரமன்றி பொறி நூல் வல்லுனருமாவர். 1669-ம் ஆண்டு பரிஸ்நகரின் வானசாஸ்திர கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர். செவ்வாய்க் கிரகத்துக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள தூரத்தைக் கணித்தவரும் பூமியானது இருதுருவங்களிலும் சற்றுத் தட்டையாக உள்ளது என்பதைக் கண்டுபிடிக்க உதவிபுரிந்தவருமான இரு விஞ்ஞானிகளில் இவரும் ஒருவர்.

## வத்திக்கானுடன் அமெரிக்காவின் புதிய ஒழுங்கு

வத்திக்காளில் ஐக்கிய அமெரிக்காதேசம் ஒருஸ்தானிகர் நிலையம்ஒன்றை அமைப்பதுபற்றிச் சிலகாலமாக ஆலோசித்துவந்திருக்கிறது. ஆனால் ஆனால் ஜனாதிபதி இந்த யோசனையைக் கைவிட்டுவிட்டதாகத் திரு: நிக்சனின் பிரசாரக் காரியதரிசி சீகிளர் அண்மையில் தெரிவித்திருக்கின்றார். மறுதேசங்களுடன் இருந்துவரும் சாதாரண அரசியல் தந்திரமுறைபோலில்லாது பாப்பரசர் 6ஆவது சின்னப்பதந்தையுடன் மனம்விட்டுக்கலந்து ஆலோசித்துக் கொள்ளும் முறையில் தனக்கு உகந்த உயர் உத்தியோகஸ்தர்களை விஷயத்துக்குத் தக்கதாக அடிக்கடி அனுப்பிவர ஜனாதிபதி முடிவுசெய்திருப்பதே இதற்குக் காரணமாகும். இந்த ஒழுங்கின் பிரகாரம் சென்றவாரம் திரு. பீற்றர் பிளொமிகன் என்பவரைத் திரு. நிக்சன் பாப்பரசரிடம் அனுப்பியிருந்தார். இவர் பரிசுத்த தந்தையுடன் ஒரு மணித்தியாலமாக ஆழ்ந்த ஆலோசனையில் அமர்ந்திருந்தாரென வத்திக்கான்செய்திகள் கூறுகின்றன. பெரும்பாலும் உலக சமாதான விஷயமாகவே இவர்கள் சம்பாஷித்துக்கொண்டனரென அறிகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆடி — 1969

| | | | |
|---|---|---|---|
| 27 | ஞாயிறு | பரி. ஆவி. விழா. பின் 9-ம் ஞாயிறு | [ப] |
| 28 | திங்கள் | புனித விக்ரர் | [சி] |
| 29 | செவ்வாய் | புனித மார்த்தம்மாள் | [வெ] |
| 30 | புதன் | கிழமைப் பூசை | [ப] |
| 31 | வியாழன் | புனித இஞ்ஞாசியார் | [வெ] |

### ஆவணி — 1969

| | | | |
|---|---|---|---|
| 1 | வெள்ளி | கிழமைப் பூசை | [ப] |
| 2 | சனி | புனித விகோரியார் | [வெ] |

## காவலன் கருத்து

# மனிதனின் வெற்றி

மனிதன் சந்திரனில் காலடி வைத்த மகத்தான சாதனை, மனிதராகப் பிறந்த அனைவரும் எண்ணிப் பெருமிதம் அடையக்கூடிய தொன்றாகும். மக்கள் காலா காலமாகக் கண்ட கனவு பலித்துவிட்டது. இத்தகையதோர் அரிய சாதனையை நிலைநாட்டிய வீரர்களுக்குக் கிடைத்த பெயரும், புகழும் நியாயமானதே. அவர்களது துணிவு, மனவலிமை, சுயநலமற்ற அர்ப்பணம் ஆகியவற்றை எவரும் பாராட்டாதிருக்க முடியாது. அதே சமயத்தில் இந்த அரும்பெருஞ் செயல் சாத்தியமாவதற்கு அதன் பின்னணியில் நின்று உழைத்த விஞ்ஞானிகள், தொழில்நுட்ப நிபுணர்கள், வைத்தியர்கள் முதலிய பலரும் பேரும் புகழும் பெறுவிட்டாலும் அவர்களுக்கும் இந்த வெற்றியில் பங்குண்டு. மனிதர் ஒன்றுகூடி ஒற்றுமையுடன் உழைத்தால் எந்தக் கடின காரியத்தையும் சாதித்து விடலாம் என்பதற்கு இது ஒரு நல்ல சான்று.

புதிய உலகத்தில் குடியேறி, புதுப்புது முயற்சிகளை மேற்கொண்டு அவற்றில் வெற்றிகண்ட மக்களைக் கொண்ட இளம் நாடாகிய அமெரிக்காவுக்கு இது ஒரு மாபெரும் சாதனை. சந்திரனில் முதலடி எடுத்து வைக்கும் பாக்கியம் நீல் ஆம்ஸ்ட்ரோங்குக்கும், அமெரிக்க நாட்டுக்கும் கிடைத்துள்ளதெனினும் இதை அவர்களது தனிப்பட்ட வெற்றியாக மட்டுமன்றி, மனுக்குலத்தின் வெற்றியாகவும் கருதலாம். பல நூற்றாண்டு காலமாக விண்ணை அளந்தறிந்த வானசாஸ்திரிகள், இயற்கையைத் துருவி ஆராய்ந்த விஞ்ஞானிகள், தமது கற்பனை வளத்தால் இதை உருபீகரித்த நூலாசிரியர் ஆகியோர் இட்ட அத்திவாரத்தின்மீது எழுந்த விண்வெளி ஆராய்ச்சிகளின் சிகரமென அமைந்தது சந்திரமண்டல யாத்திரை. பல்வேறு காலத்தினரும், பல்வேறு நாட்டினரும் ஈட்டிய அறிவின் பயனாகவே இது சாத்தியமானபடியினாலேயே இதை மனுக்குலத்தின் வெற்றி என்கிறோம்.

இச்சாதனையானது மனிதன் விஞ்ஞானத்தில் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் காட்டுகிறது. அதே சமயத்தில் மனிதனால் இன்னும் எவ்வளவு காரியங்கள் சாத்தியமாகும் என்பதையும் காட்டுகின்றது.

மனிதன் சந்திர மண்டலத்தை வெற்றி கொண்டமை விஞ்ஞான உலகில் பல நன்மைகளுக்கு வழிகோலும் என்று சொல்லுகிறார்கள். அதெப்படியிருப்பினும் இச்சாதனை மனிதனை ஒருபடி உயர்த்திவிட்டதென்று கூறலாம். அரும்பெரும் செயல்களைச் செய்பவர்கள் மாத்திரமல்ல, அவற்றைக் காண்பவரும் உள்ளத்தில் ஓர் எழுச்சி பெறுகின்றனர். ஓட்டத்தில் பங்குபற்றுபவர்கள் சகல சுகங்களையும் மறந்து தமது காரியத்தில் கண்ணாயிருப்பதுபோல் விண்வெளி வீரரும் தம் பயிற்சிக்காலத்திலும், விண் யாத்திரையின்போதும் எத்தகைய கட்டுப்பாடுகளுக்குத் தம்மை உட்படுத்தினார்கள் என்பதை அறிவோம். மனிதன் உள்ளத்தில் ஒரு சக்தி வாய்ந்த இலட்சியம் இருக்குமானால் அது அவனை எல்லா அற்பத்தனங்களினின்றும் விடுவித்துவிடும் என்பதை அது காட்டவில்லையா?

---

மனதைக் கவர்ந்த ஒருவரை எப்படி உள்ளரங்க பூர்வமாக அறிந்து, உணர்ச்சிப் பெருக்குடன் அன்பைப் பொழிந்து வீரத்துவமாகத் தொண்டாற்றி, சேவை செய்கிறோமோ அஃதேபோன்று கிறிஸ்துவுடனும் முழுமையாக இணைந்து விடுவதே 'கிறிஸ்தவன்' என்ற சொல்லின் அர்த்தமாகும். —க்ளோடி

# ஜீவ ஊற்றாகிய கிறிஸ்துவின் சேவையில் நாம் . . . .

"கவனமாக இறைவனது குரலொலிக்குச் செவிசாய்ப்பவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் இறைவன் பேசுவதைக் கேட்கிறார்கள்." நம் பிதாப்பிதாக்களும், தீர்க்கதரிசிகளும், ஏன் அப்போஸ்தலர்கள் பரிசுத்தவான்கள் முதலாய் இறைவன் குரலொலிக்குச் செவிசாய்த்து, நம் அன்பின் மீட்பர் திவ்விய யேசுவைப்போல் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றியபடியாலன்றோ பரிசுத்தராகும் பாக்கியம்பெற்றார்கள். இவ்வாறு தேவனால் அழைக்கப்பட்டு அவரது இனிய குரலொலிக்குச் செவிகொடுத்தவர்கள் தம்மையே இறைவனுக்குக் கையளித்து, தூய ஆவியானவரின் உதவியுடன் அவரின் ஏவுதல்களுக்குத் தலைசாய்த்து, அவரின் சித்தத்தை நிறைவேற்றத் தயாராய் இருந்தார்கள்; இருக்கிறார்கள்.

இறைவனது வார்த்தையோ உயிருள்ளதும், சக்தி வாய்ந்ததும், நம்மை மாற்றியமைத்துப் புது மனிதனுக்கவும் கூடியது. நாம் எப்படி இருக்க வேண்டும் என்று நம் பரலோக தந்தை விரும்புகிறாரோ, அவ்வண்ணம் நம்மை மாற்றியமைக்கவும்கூடியது. ஆகவே, நாம் சமாதானத்தின் வருடமாகிய இவ்வாண்டில் கபடமில்லாத சிந்தையுடன், நேர்மையான வழியில் இறைவனின் வார்த்தைகளை வரவேற்று, அதில் நம் முழு விருப்பையும் காட்டி, புது மனிதராக உருப்பெற்று, இதயத்தில் இரட்சணிய தாகம் கொழுந்துவிட்டெரியும் கிறீஸ்துவின் சேவையாளராக—அப்போஸ்தலராக மாற்றமடைய வேண்டும். அவரது அன்புப் பெருக்கின் ஜீவ ஜலத்தைப் பானம் பண்ணியவர்களாய்த் திருப்தியான முழுமனதோடு நம் சகோதரருக்கும் அச்சீவ சலத்தைப் பருகப்பண்ண வழிகாட்டவேண்டும். இவ்விருப்பு எம்மைக் கிறீஸ்துவுடன் இணைத்து விடுகிறது. இவ்வாறு கிறீஸ்துவுடன் இணைக்கப்பட்டு அவரின் நித்திய சீவியத்துக்குப் பாய்கிற ஜீவநீரூற்றில் திளைத்த நாம் யாக்கோபின் கிணற்றண்டை யேசுநாதரை—மெசியாவைக் கண்டேன் என்று தன் நாடெங்கும் சொல்லி அவருக்குச் சாட்சி கொடுத்த சமாரிய ஸ்திரிபோல் நாமும் அவரின் சாட்சிகளாய், சேவையாளராய்த் திகழ முன்நிற்போமாக.

ஆம்! யேசுநாதர் தம் அப்போஸ்தலரை அழைத்தது போல் நம் ஒவ்வொருவரையும் தனித்தனியே அழைக்கிறார். இவ்விடத்தில் நாம அல்ல, அவரே நம்மை அழைக்கிறார். நாம் ஒவ்வொருவரும அதிக சேவை செய்யும்படியாக இறைவனுடன் ஒத்துழைக்கும் தொண்டர்களாய் இருக்க வேண்டும்என்று அவர் விரும்புகிறார். நமது அர்ச்சிப்பும் நாம் இறைவனுக்குச் செவிசாய்ப்பதில்தான் அடங்கியுள்ளது. இவ்விடம் இறைவனது குரல் நேர்முகமாகவோ, திருச்சபை மூலமோ, நல்வாசினை மூலமாகவோ நம்மை அழைக்கிறது. இந்த அழைத்தலின் மேன்மையானது ஜாதி, குலம், செல்வம், உலக விகற்பங்கள் யாவற்றிலும் மேம்பட்டதாக இருக்கிறது. அதாவது, அப்போஸ்தலராகிய பவுல் கூறுவதுபோல், கிறீஸ்துவின் சரீரமாகிய சபை பக்தி விருத்தி அடைவதற்காக "அவர் சிலரை அப்போஸ்தலராகவும், தீர்க்கதரிசிகளாகவும், சுவிசேஷகராகவும், மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்." அடுத்தபடியாக என்னசொல்லுகிறார்? "நீங்கள் இலவசமாய்ப் பெற்றுக்கொண்டதை இலவசமாய்க் கொடுங்கள்" என்கிறார். "அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்பேர். ஆகையால், அறுப்புக்கு எஜமானனவரிடம் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்று முறைப்படுகிறார். "சகல சாதி சனங்களுக்கும் சுவிசேஷம் போதிக்கப்பட வேண்டும" என்று கட்டளை இடுகிறார். இவ்வாறாக நம் நல்ல மீட்பர் தாம் தொடக்கிவிட்டுப்போன இரட்சணிய அலுவலை நாமும் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று ஆசிக்கிறார். எவ்வாறெனில், ஒருவரைக் கிறீஸ்துவின் பலியை ஒப்புக்கொடுத்துச் செபிக்கும் குருவாகவும், மற்றொருவரை நோயாளரைப் பராமரிக்கும் கன்னியாஸ்திரியாகவும், வேறொருவரைக் கத்தோலிக்க சேவை அங்கத்தவராகவும், இன்னும் ஒருவரைக் கிறீஸ்துவின் மகிமையை விளக்கும் விஞ்ஞானியாகவும் படைத்து, இவற்றின்மூலம் தம் பிதாவின் பணியை நற்சேவையாக அவரின் மகிமை விளங்கச் செய்து முடிக்கும்படி கேட்கிறார். விசேஷமாகக் கிறீஸ்துவின் பாடுகளிலே ஒன்றிப்பதற்காக ஒரு நோயாளியாகவோ, மரணத்தருவாயில் இருப்பவராகவோ அழைக்கிறார். இவர்களுடன் நில்லாது இன்னும் கூடுதலாக இன்று உலகின் வெளிச்சமாய், மேல்வரிச் சட்டமாய்த் துலங்கும்படி கிறீஸ்தவ தம்பதிகளை இருகரம் விரித்து அழைக்கிறார். ஏன், இன்றைய திருச்சபையின் விருத்தி அவர் கையிலேயே இருக்கின்றது. ஆகையால், நாம் நம் மீட்பருக்குச் சேவைசெய்யும் பணியில் முந்திக்கொள்வோமாக. எவ்வாறெனில், அன்பிதயமுடையவன் தனது செப தபத்தால் பாவிகளை மனந்திருப்பிக் கிறீஸ்துவண்டை சேர்ப்பதிலும், பணமுள்ளவன் தன் செல்வத்தை ஏழைகளுக்கு நீதியான முறையில் பகிர்ந்தளிப்பதிலும், எழுத்தாளரும் அறிவாளரும் தாம் அறிந்த கிறீஸ்துவை உலகடங்கலும் அறியவைப்பதிலும், பிணியாளி தன் நோய் உடல்மூலம் அச்சரீரத்தில் பாடுபட்டுத் தன்னுடையவும் சகோதரருடையவும் பாவங்கட்குப் பரிகாரஞ் செய்தும் நம் அன்பின் தெய்வத்துக்குச் சேவை செய்யலாம். இப்புனிதமான சேவை பூரணப்படும்படி உதார குணத்துடன் உலகில்ஏற்படும் நாளாந்த கஷ்டங்கள் மத்தியில் சுயநலம் ஆகங்காரம் வீண்புகழ் இவற்றை வேரோடு களைந்து, தெய்வசித்தத்துக்கு அமைந்து வார்த்தைகளால் அல்ல, செயல்முறையில் தேவனுக்குச் சேவைசெய்ய பரிசுத்த கன்னி மரியம்மாளைப் பின்பற்றுதல் உசித முறையாகும்.

ஒவ்வொரு செயல் ஆரம்பிக்கும்போதும் (உரோ. 12-ம் அதி. 2-ம் வச.) "இந்தப் பிரபஞ்சத்துக்கு ஒத்த வேடம் தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூர

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்)

— நாதன் —

## இஸ்பிரித்துச்சாந்து ஆகமனத்தின்பின் ஒன்பதாம் ஞாயிறு

சருவேசுரன் எமக்கு அளிக்கிற வரப்பிரசாதங்களை நாம் வீணாக்கிக் கெட்டுப்போகாமல் அவரிடத்தில் முழு நம்பிக்கை வைத்து அவருக்குச் சித்தமானவைகளையே மன்றாடிக் கேட்டு அவரைச் சோதிக்கிறவர்களாகாமல் அவருடைய கற்பனைகளின்படி நடந்தால்மாத்திரம் ஈடேறலாம் என்ற உண்மை இன்றைய பூசையிலே காட்டப்படுகிறது. சுவிசேஷத்திலே கர்த்தர் ஜெருசலேம் பட்டணத்தை நோக்கிக் கண்ணீர்விட்டு அழுத சம்பவத்தை வாசிக்கிறோம். அவரால் மிகவும் நேசிக்கப்பட்ட அந்த நகரம் அவரை ஏற்றுக்கொள்வதற்குக் கொடுக்கப்பட்டிருந்த நற்தருணங்களையெல்லாம் அவமாக்கினதோடு அமையாமல் அவரைக் கொல்லவும் துணிந்ததினால் தேவகோபத்துக்குள்ளாகி பயங்கரமான அழிவுக்கு ஏதுவாவதை அறிந்து கர்த்தர் கசிந்துருகுகிறார். நாமும் நமக்குத் தரப்படும் நற்றருணங்களை அசட்டைபண்ணி எங்கள் கர்த்தரைச் சிலுவையில் அறைவதுபோல, சாவானபாவத்தில் விழுவோமேயாயின் எங்கள் ஆத்துமமாகிய யெருசலேம்பட்டணமும் பாரஅழிவுக்கு உள்ளாகுமென்று அறிந்து, எங்கள் சத்துருவுக்கு எதிராகச் செபம்பண்ணிப் பாவநோய் எம்மை அணுகாமல் காக்கும் மருந்தாகிய திவ்விய சற்பிரசாதத்தைப் பயபக்தியோடு அருந்திவரக்கடவோம். சகல உலோகத்திலும் மகத்துவம் உள்ள கர்த்தருடைய திருநாமம் நமக்கு உதவியாயிருக்கும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ ஆடி மீ 26ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org